# 1 தெசலோனிக்கேயர் 1

## நவீன மொழிபெயர்ப்பாளர்களின் பகுதிப்பகுதியான பிரிவுகள்

| USB[4] | NKJV | NRSV | TEV | NJB |
| --- | --- | --- | --- | --- |
| வணக்கம்<br>1:1 | வாழ்த்துக்கள்<br>1:1 | வணக்கம்<br>1:1 | வணக்கம்<br>1:1 | அறிமுகம்<br>1:1 |
| தெசலோனிக்கேயர்களின் விசுவாசம் மற்றும் முன்மாதிரி<br>1:2-10 | அவர்களின் நல்ல முன்மாதிரி<br>1:2-10 | நன்றிகூறல்<br>1:2-10 | தெசலோனிக் கேயரின் அன்பும் விசுவாசமும்<br>1:2-10 | நன்றிகூறல் மற்றும் வாழ்த்துக்கள்<br>1:2-3<br>1:4-10 |

முழு பகுதிப்பகுதியான பிரிவுகளானது வெளிப்பாடாயில்லாவிட்டாலும் எழுத்தாளருடைய நோக்கத்தினை புரிந்துக்கொண்டு பின்தொடருவதற்கான திறவுகோலாய் இருக்கிறது. ஒவ்வொரு நவீன மொழிப்பெயர்ப்புகளும் பகுதிப்பகுதியாக பிரிக்கப்பட்டு சுருக்கி கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு பந்தியும் ஒரு மைய தலைப்பினையோ, சத்தியத்தினையோ அல்லது கருத்தினையோ கொண்டதாக காணப்படுகின்றது. ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் தங்களுக்கென தனித்துவமான முறையில் தலைப்பினை உள்ளடக்கியுள்ளது. நீங்கள் வார்த்தைகளை வாசிக்கும் போது உங்களது பாடபொருளின் விளக்கத்துக்கும் வசன பிரிவுக்கும் பொருத்தமான மொழிபெயர்ப்பு யாதென உங்களை நீங்களே வினவுங்கள்.

ஒவ்வொரு அதிகாரத்திலும் முதலாவது வேதத்தை வாசித்து அதனுடைய உள்ளடக்கங்களை (பிரிவுகளை) இணங்கண்டு, பின்பு நாம் புரிந்துக்கொண்டவற்றோடு நவீன மொழிபெயர்ப்புக்களை தொடர்புப்படுத்தி பார்க்கவேண்டும். எழுத்தாளனின் உண்மையான நோக்கத்தினை அவரது தர்க்கத்தினூடாகவும் அமைப்பினூடாகவும் அறிந்துக்கொண்டால் மாத்திரமே வேதாகமத்தை எங்களால் புரிந்துக்கொள்ள இயலும். வெளிப்பாட்டினை எழுதிய ஆசிரியரேயல்லாமல் வாசிப்பவர்களுக்கு செய்தியை மாற்றவோ மேம்படுத்தவோ முடியாது. வேதாகம வாசிப்பாளர்கள் உண்மையான வெளிப்பாட்டினை தங்களுடைய அன்றாட வாழ்வில் பிரயோகப்படுத்தும் பொறுப்பினை கொண்டிருக்கின்றனர்.
எல்லா விதிமுறைகளும் சுருக்கங்களும் பின்வரும் ஆவணங்களில் முழுமையாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. (கிரேக்க இலக்கண அமைப்பினை குறித்த சுருக்கமான விளக்கம், உரை விமர்சனம் மற்றும் அருஞ்ச்சொற்ப்பொருள்)

**வாசிப்பு சுழற்சி 3 (சிறந்த வேத வாசிப்புக்கான வழிகாட்டலிலிருந்து)**

*பந்திபந்தியான பிரிவுகளின் அடிப்படையில் எழுத்தாளரின் உண்மையான நோக்கத்தை அறிதல்*

இது ஒரு கற்றல் வழிகாட்டல் விளக்கவுரை. அதாவது, வேதாகமத்திற்குரிய உங்களுடைய தனிப்பட்ட பொருள் விளக்கத்துக்கு நீங்களே பொறுப்பாளர்கள். நம்மோடிருக்கும் வெளிச்சத்தோடு நாம் ஒவ்வொருவரும் கண்டிப்பாக நடக்க வேண்டியது அவசியம். நீங்களும், வேதாகமமும் பரிசுத்த ஆவியும் பொருள்விளக்கத்துக்கு இன்றியமையாதவர்கள். நீங்கள் இதனை விளக்கவுரையாளருக்கு விட்டுவிட முடியாது.

முழு அதிகாரத்தையும் ஒரே அமர்வில் வாசிக்கவும். விடய பிரிவுகளை இனங்கண்டுக்கொள்ளுங்கள். மேற்கூறப்பட்ட ஐந்து மொழிப்பெயர்ப்புக்களுடனும் உங்களுடைய விடய பிரிவுகளை ஒப்பிட்டுப்பாருங்கள். பகுதிப்பகுதியான பிரிவுகளானது வெளிப்பாடாயில்லாவிட்டாலும் மொழிப்பெயர்ப்பின் ஆதாரமாகிய எழுத்தாளருடைய நோக்கத்தினை புரிந்துக்கொண்டு பின்தொடருவதற்கான திறவுகோலாய் இருக்கிறது. ஒவ்வொரு பந்தியும் ஒரே ஒரு விடயத்திளை உள்ளடத்தியே காணப்படுகின்றது.

1. முதலாவது பந்தி
2. இரண்டாவது பந்தி
3. மூன்றாவது பந்தி
4. போன்றவை.

**சூழ்நிலை சம்பந்தமான ஆய்வு வசனங்கள் 1-10**

1. 1 தெச. 1: 1 என்பது முதல் நூற்றாண்டின் நிலையான கடித வடிவமாகும். இதேபோன்றே ஒலிக்கும் கிரேக்க வார்த்தையான "வாழ்த்துக்கள்" *(charis vs. charein)* க்கு பதிலாக "கிருபையை" பயன்படுத்தியதன் மூலம் பவுல் அதை தனித்துவமான கிறிஸ்தவர்களுக்குரியதாக மாற்றினார்.

2. 1 தெச. 1: 2-10 ஒரு நீண்ட நன்றி ஜெபத்தை தெசலோனிகேயில் உள்ள விசுவாசிகளுக்காக தேவனிடம் ஏறெடுக்கிறார்:
   1. 1 தெச. 1: 2-5 பவுலின் சுவிசேஷ சாட்சியை விவரிக்கும் ஒரு வாக்கியத்தை ஏறெடுக்கிறார்.
   2. 1 தெச. 1: 6-9 தெசலோனிக்கேயர் ஏற்றுக்கொண்டதை விவரிக்கிறது.

3. திரித்துவம் 1 தெச 1: 2-5-ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பு தலைப்பு: கலாத்தியர் 4: 4-ல் உள்ள திரித்துவத்தைக் காண்க.

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசலோ**

**னிக்கேயர் 1:1**

**[1]பவுலும், சில்வானும், தீமோத்தேயும், பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.**

**1: 1 "பவுல்"** தர்சிஸின் சவுல் என்று அப்போஸ்தலர் 13: 9 ல் பவுல் அழைக்கப்படுகிறார். "சிதறியிருந்த" பெரும்பாலான யூதர்களுக்கு எபிரேய பெயரும் கிரேக்க பெயரும் இருந்திருக்கலாம். அப்படியானால், சவுலின் பெற்றோர் அவருக்கு இந்தப் பெயரைக்

கொடுத்தார்கள், ஆனால் அப்போஸ்தலர் 13-ல் "பவுல்" என்ற பெயர் திடீரென்று ஏன் தோன்றியது? ஒருவேளை (1) மற்றவர்கள் அவரை இந்த பெயரில் அழைக்க ஆரம்பித்திருக்கலாம் அல்லது (2) அவர் "சிறிய" அல்லது "குறைந்தது" என்ற வார்த்தையால் தன்னைக் குறிப்பிடத் தொடங்கினார். பவுலோஸ் என்ற கிரேக்க பெயர் "சிறியது" என்று பொருள்படும். அவரது கிரேக்க பெயரின் தோற்றம் குறித்து பல கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன:

1. பவுல் உயரம் குறைந்தவர், ஸ்தூலித்தவர், வழுக்கையானவர், வளைந்த-கால்களையுடையவர், மயிர் நிறைந்த கண்-புருவம், மற்றும் நீளமான கண்கள் கொண்டவர் என்ற இரண்டாம் நூற்றாண்டின் பாரம்பரியம் பெயரின் சாத்தியமான ஆதாரங்கள் காணப்படுகின்றன, இது தெசலோனிகாவிலிருந்து பவுல் மற்றும் தெக்லா என அழைக்கப்படும் அங்கீகரிக்கப்படாத வேதாகம புத்தகத்திலிருந்து பெறப்பட்டது.
2. அப்போஸ்தலர் 9: 1-2-ல் உள்ளதைப் போலவே சபையை பவுல் துன்புறுத்தியதால் தன்னை "பரிசுத்தவான்களில் மிகக் குறைவானவர்" என்று அழைக்கும் வேத பகுதிகள் (ஒ.பா. 1 கொரி. 15: 9; எபே 3: 8; 1 தீமோ. 1:15) ல் உள்ளது.

சிலர் இந்த "குறைந்தது" என்பதை அவர் சுயமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பின் தோற்றமாக காண்கிறார்கள். இருப்பினும், கலாத்தியர் போன்ற ஒரு புத்தகத்தில், எருசலேமின் பன்னிரண்டு அப்போஸ்தலனுடனான தனது சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார், இது ஓரளவு சாத்தியமில்லை (ஒ.பா. 2 கொரி. 11: 5; 12:11; 15:10).

தெசலோனிக்க சபையின் அறிமுகத்தில் பவுலின் அப்போஸ்த்துவத்தைக் காப்பது குறித்து எந்தவிதமான விளக்கமும் இல்லை என்பதைக் கவனியுங்கள். பவுலின் சபைகளில் அனைத்திலும் தெசலோனிகா மற்றும் பிலிப்பி ஆகியவை மிகவும் ஆதரவாக இருந்தன.

▣ **"சில்வான்"** இது அவரது ரோமப் பெயர். அவர் பவுலைப் போலவே ரோமக் குடிமகன் ஆவார் (ஒ.பா. அப்போஸ்தலர் 16:37). லூக்கா எப்போதும் அவரை "சீலா" என்று அழைக்கிறார். அவர் ஒரு வரம்பெற்ற தீர்க்கதரிசி மற்றும் பர்னபா போன்றே எருசலேம் தேவாலயத்தின் மரியாதைக்குரிய உறுப்பினராக இருந்தார் (ஒ.பா. அப்போஸ்தலர் 15: 22,27,32; 1 பேதுரு 5:12). இரண்டாவது மற்றும் மூன்றாவது மிஷனரி பயணங்களில் பர்னபாவுக்குப் பதிலாக பவுலின் தோழனாக மாறினார்.

**SPECIAL TOPIC: SILAS/SILVANUS**

**சிறப்பு தலைப்பு: சீலா / சில்வான்**

பர்னபாவும் யோவான் மாற்கும் மீண்டும் சீப்புருத் தீவுக்குச் சென்றபின் (உதாரணமாக, மாற்கைக் குறித்த வாதம், ஒ.பா. அப்போஸ்தலர் 15: 36-39) இரண்டாவது மிஷனரி பயணத்தில் பவுல் தன்னுடன் செல்லத் தேர்ந்தெடுத்தவர் சீலா, அல்லது சில்வான் ஆவர். (உதாரணமாக, அப்போஸ்தலர் 15: 40-18: 5).

1. அப்போஸ்தலர் 15: 22-ல் அவர் முதலில் வேதாகமத்தில் குறிப்பிடப்படுகிறார், அங்கு அவர் எருசலேம் திருச்சபையின் சகோதரர்களில் ஒரு பிரதானமானவர் என்று அழைக்கப்படுகிறார்.
2. அவர் ஒரு தீர்க்கதரிசியாகவும் இருந்தார் (ஒ.பா. அப்போஸ்தலர் 15:32).
3. அவர் பவுலைப் போன்ற ரோமக் குடிமகனாக இருந்தார் (ஒ.பா. அப்போஸ்தலர் 16:37).

4. அவரும் யூதாஸ் பர்சபாவும் நிலைமையை நோட்டம் செய்ய எருசலேம் தேவாலயத்திலிருந்து அந்தியோகியாவுக்கு அனுப்பப்பட்டனர் (ஒ.பா. அப்போஸ்தலர் 15: 22,30-35).
5. பவுல் அவரை 2 கொரி. 1:19ல் சக நற்செய்தி போதகராக குறிப்பிடுகிறார்.
6. பின்னர் அவர் 1 பேதுரு நிருபத்தில் பேதுருவுடன் அடையாளம் காணப்பட்டார். (ஒ.பா. 1 பேது. 5:12; ஒருவேளை இதனால்தான் பேதுரு பவுலைப் போலவே பேசுகிறார்).
7. பவுல் மற்றும் பேதுரு இருவரும் அவரை சில்வான் என்றும், லூக்கா அவரை சீலா (சவுலின் அராமைக் வடிவம்) என்றும் அழைக்கிறார். சீலா அவரது யூதப் பெயராகவும், சில்வான் அவரது லத்தீன் பெயராகவும் இருக்கலாம் (ஒ.பா. F. F. புரூஸ், *Paul: Apostle of the Heart Set Free*, பக். 213).

Copyright © 2014 Bible Lessons International

▣ **"தீமோத்தேயு"** அவர் பவுலின் முதல் மிஷனரி பயணத்தில் லீஸ்திராவிலிருந்து பவுலினால் மனமாற்றப்பட்டார். இரண்டாவது பயணத்தில் யோவான் மாற்குக்கு பதிலாக தீமோத்தேயு பவுலின் குழு உறுப்பினரானார் (ஒ.பா. அப்போஸ்தலர் 16: 1-3). ஒரு முழுமையான விளக்கத்திற்கு ஒ. பா. அறிமுகம் B. 3

▣ **"தெசலோனிக்கேயர்"** அப்போஸ்தலர் 17: 1-9 இந்த மக்களுடன் பவுல் சந்தித்ததை விவரிக்கிறது.

▣ **"சபை"** *Ekklesia* என்றால் "அழைக்கப்பட்டவர்கள்" என்று பொருள். இது முதலில் கிரேக்க சமுதாயத்தில் ஒரு பட்டணச் சபை என்று பொருள்பட்டது (ஒ.பா. அப்போஸ்தலர் 19:32).
பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பான, செப்டுவஜின்ட், எபிரேயப் பதமான *qahal* ஐ "சபை" என மொழிபெயர்க்கப்பட்டது, அதாவது ஒ.பா. யாத்திராகமம் 12: 6; 16: 3; லேவி. 4:13; எண் 14: 5; 20: 6; உபா 5:22; 9:10; 10: 4; 18:16). ஆரம்பகால சபையானது தங்களை இஸ்ரேலின் மேசியானிய சபையாக கருதியது. கலா. 1: 2ல் சிறப்பு தலைப்பைக் காண்க.

▣ **"பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும்"** தேவனும் இயேசுவும் ஒரு முன்னிடைச்சொல்லைப் பயன்படுத்தி இரண்டையும் அடையாளம் காணக்கூடியதாய் ஒரு ஒருங்கிணைந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளது (ஒ.பா. 1 தெச. 3:11; 2 தெச. 1: 2, 12; 2: 16). கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை இறையியல் ரீதியாக உறுதிப்படுத்த புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் பயன்படுத்தும் ஒரு நுட்பம் இது. மற்றொன்று பழைய ஏற்பாட்டில் YHWHயை குறித்த தலைப்புகளையும் செயல்பாடுகளையும் நாசரேத்தின் இயேசுவின் குணாதிசயங்களோடு கூறுவது. பின்வரும் சிறப்பு தலைப்பைக் காண்க.

**SPECIAL TOPIC: FATHER**

### சிறப்பு தலைப்பு: பிதா

பழைய ஏற்பாடு, தேவனை ஒரு நெருக்கமான குடும்ப உருவகமாக பிதாவாக அறிமுகப்படுத்துகிறது (சிறப்பு தலைப்பு: தேவனின் பிதாத்துவம் பார்க்கவும்):

1.இஸ்ரேல் தேசம் பெரும்பாலும் YHWH இன் "குமாரன்" என்று விவரிக்கப்படுகிறது (ஒ.பா. ஓசியா 11: 1; மல். 3:17)

2.உபாகம காலத்திற்கு முன்பே தேவனைப் பிதா என ஒப்புவமையாக பயன்படுத்தப்படுகிறது (1:31)

3.உபாகமம் 32ல் இஸ்ரேல் "அவருடைய பிள்ளைகள்" என்றும் தேவன் "உங்கள் பிதா" என்றும் அழைக்கப்படுகிறார்

4.இந்த ஒப்புமை சங்கீதம் 103: 13 இல் கூறப்பட்டுள்ளது. மற்றும் சங். 68: 5 (திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பன்)

5.தீர்க்கதரிசின புத்தகங்களில் இது பொதுவானது (ஒ.பா. ஏசா. 1: 2; 63: 8; இஸ்ரவேல் பிள்ளையாவும், தேவன் பிதாவாகவும், 63:16; 64: 8; எரே. 3: 4,19; 31: 9).

இயேசு அராமைக் பேசினார், ஆகையால் "தந்தை" தோன்றும் பல இடங்கள், அது கிரேக்க *Pater*, மற்றும் அராமைக் *Abba*வைப் பிரதிபலிக்கக்கூடும் (ஒ.பா. மாற்கு 14:36). "அப்பா" அல்லது "தந்தை " என்ற இந்த குடும்பச் சொல், பிதாவுடனான இயேசுவின் நெருக்கமான உறவைப் பிரதிபலிக்கிறது; இதை அவர் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு பிதாவுடனான நம்முடைய நெருங்கிய உறவை ஊக்குவிப்பதற்காக வெளிப்படுத்துகிறார். "பிதா" என்ற சொல் பழைய ஏற்பாட்டில் YHWH க்குப் பதிலாக குறைவாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் இயேசு அதை அடிக்கடி மற்றும் பரவலாக பயன்படுத்துகிறார். விசுவாசிகளின் கிறிஸ்துவின் மூலமான தேவனோடு கூடிய புதிய உறவுக்கு இது ஒரு முக்கிய சான்றாகும் (ஒ.பா. மத்தேயு 6: 9).

Copyright © 2014 Bible Lessons International

▫ **"கர்த்தர்"** தேவன் தனது உடன்படிக்கைப் பெயரை மோசேக்கு யாத்திராகமத்தில் வெளிப்படுத்தினார். 3: 14 - YHWH. யூதர்கள் பிற்காலத்தில் இந்த புனித பெயரை உச்சரிக்க பயந்தார்கள், அவர்கள் அதை வீணாக பயன்படுத்தி பத்து கட்டளைகளில் ஒன்றை மீறமாட்டார்கள் (ஒ.பா. யாத்திராகமம் 20: 7; உபா. 5:11). ஆகையால், அவர்கள் வேதவசனங்களை வாசிக்கும் போது வேறொரு வார்த்தையை *Adon* என மாற்றினார்கள், அதாவது "கணவன், உரிமையாளர், எஜமானர், ஆண்டவர். "இது YHWH இன் ஆங்கில மொழிபெயர்ப்பின் மூலமாகும்: கர்த்தர்.

பெரும்பாலும் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் இயேசுவை "இறைவன்" *(kurios)*, என்று அழைத்தபோது, அவர்கள் இயேசுவின் தெய்வதத்துவத்தை வலியுறுத்தினார்கள். இந்த உறுதிப்படுத்தல் ஆரம்பகால திருச்சபையின் ஞானஸ்நான விசுவாச அறிக்கையாக மாறியது, "இயேசுவே கர்த்தர்" (ஒ.பா. ரோமர் 10: 9-13; பிலி. 2: 6-11).

▫ **"இயேசு"** இந்த பெயரின் அர்த்தம் "YHWH இரட்சிப்பார்" (ஒ.பா. மத். 1:21), இது பழைய ஏற்பாட்டு பெயரான "யோசுவா" க்கு சமம். "இயேசு" என்பது தேவனுடனான உடன்படிக்கைப் பெயருடன் (YHWH) பின் பொருத்தப்பட்ட இரட்சிப்பு (*hosea*) என்ற எபிரேய வார்த்தையிலிருந்து பெறப்பட்டது.

▣ **"கிறிஸ்து"** இது "அபிஷேகம் செய்யப்பட்டவர்" (*mashiach*) என்பதற்கான எபிரேய வார்த்தையின் மொழிபெயர்ப்பு ஆகும். இது YHWH இன் நியமிக்கப்பட்ட பணிக்கு ஆவியால் சிறப்பு அதிகாரம் மற்றும் ஆயத்தப்படுத்துதலைக் குறிக்கிறது. இது தேவனின் சிறப்பு, வாக்குறுதியளிக்கப்பட்ட, வரும் ஒருவர், "மேசியா" (ஒ.பா. லூக்கா 2: 11,26; 3:15; 4:41; 9:20; 22:67; 23: 2,35,39); 24: 26,46).

▣ **"கிருபை"** பவுல் மதச்சார்பற்ற வாழ்த்தாக *charein* (வாழ்த்துக்கள்) க்குப் பதிலாக *charis* (கிருபை)யை மாற்றினார், இது தனித்துவமான கிறிஸ்தவ மற்றும் இறையியல் ரீதியாக முதன்மையானது. கிருபை எப்போதும் சமாதானத்திற்கு வழிவகுக்கும்.

▣ **"சமாதானம்"** இது எபிரேய வாழ்த்து *shalom* பிரதிபலிக்கிறது. "கிருபை மற்றும் சமாதானம்" என்ற சொற்றொடர் பாரம்பரிய கிரேக்க மற்றும் எபிரேய வாழ்த்துக்களை இணைப்பதற்காக இருக்கலாம்.

கிங் ஜேம்ஸ் பதிப்பு "நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும்" ஒரு வழக்கமான பவுலின் சொற்றொடரை 2 தெச 1: 1 இலிருந்து "சமாதானத்திற்கு" பின்னர் சேர்க்கிறது. இந்த சொற்றொடர் கிரேக்க கையெழுத்துப் பிரதிகளில் B, F, அல்லது G இல் தோன்றவில்லை. இது பண்டைய கையெழுத்துப் பிரதிகளில் காணப்படுகிறது ℵ மற்றும் A. A சற்று மாற்றியமைக்கப்பட்ட வடிவம் கையெழுத்துப் பிரதியில் Dஇல் உள்ளது. இது 2 தெச 1: 2 இலிருந்து ஒரு வேதப்பராகரின் வியாக்கியானமாக இருக்கலாம். UBS⁴ கூடுதல் சொற்றொடர் இல்லாமல் "A" மதிப்பீடு (சில), குறுகிய வசனத்தை அளிக்கிறது

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசலோனிக்கேயர் 1:2:10**

**2.தேவனுக்குப் பிரியமான சகோதரரே, உங்கள் விசுவாசத்தின்
கிரியையையும், உங்கள் அன்பின் பிரயாசத்தையும், நம்முடைய கர்த்தராகிய
இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் நம்பிக்கையின் பொறுமையையும்,
நம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நாங்கள் இடைவிடாமல்
நினைவுகூர்ந்து, 3.நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்று நாங்கள்
அறிந்து, 4எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக்குறித்து
விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை
ஸ்தோத்திரிக்கிறோம். 5எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில்
வசனத்தோடேமாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும்,
முழுநிச்சயத்தோடும் வந்தது; நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது
உங்கள்நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று
அறிந்திருக்கிறீர்களே. 6நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின்
சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, எங்களையும்
கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி, 7இவ்விதமாய் மக்கெதோனியாவிலும்
அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்.
8எப்படியெனில், உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம்
மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல், நாங்கள்
அதைக்குறித்து ஒன்றும் சொல்லவேண்டியதாயிராதபடிக்கு,
தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று.9ஏனெனில்,
அவர்கள்தாமே எங்களைக்குறித்து, உங்களிடத்தில் நாங்கள் அடைந்த
பிரவேசம் இன்னதென்பதையும், ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு
ஊழியஞ்செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு
மனந்திரும்பினதையும், 10.அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும்
கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற**

**அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே.**

**1: 2 "நாங்கள்"** இது பவுல், சீலா மற்றும் தீமோத்தேயு (விசுவாசிக்கும் யூத மிஷன் குழு) ஆகியவர்களைக் குறிக்கிறது. பவுல் இந்த பன்மை பெயர்ச்சொற்களை வேறு எந்த நிருபத்தையும் விட 1 தெசலோனிக்கேயரில் அடிக்கடி பயன்படுத்தினார். இது புத்தகத்தை எழுதும் செயல்முறையை எவ்வாறு பாதித்தது என்பது நிச்சயமற்றது. பவுல் பெரும்பாலும் வேதப்பாரகர்களைப் பயன்படுத்தினார். இந்த வேதப்பாரகர்களுக்கு எவ்வளவு சுதந்திரம் இருந்தது என்பது சரியாகத் தெரியவில்லை.

▣ **"தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்"** இது நிகழ்கால சாதாரணநிலை செய்வினை தற்போதைய செயலில் உள்ள அறிகுறியாகும். நன்றி செலுத்தும் ஆவி முழு நிருபத்தையும் வகைப்படுத்துகிறது (ஒ.பா. 1 தெச. 2:13; 3: 9). பிலிப்பியில் உள்ள சபையுடன் போலவே பவுல் இந்த சபையுடனும் ஒரு அற்புதமான உறவைக் கொண்டிருந்தார். பவுலின் தொடக்க ஜெபங்கள் கிரேக்க பாணியில் கலாச்சார ரீதியாக எதிர்பார்க்கப்படுவது மட்டுமல்லாமல், பெரும்பாலும் அவருடைய இறையியல் தலைப்புகளையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

**SPECIAL TOPIC: THANKSGIVING**

**சிறப்பு தலைப்பு: நன்றி செலுத்தல்**

முன்னுரை

1. இது தேவனைப் பற்றிய விசுவாசிகளின் பொருத்தமான அணுகுமுறை:
    1. இது கிறிஸ்துவின் மூலம் தேவனைப் புகழ்ந்து பேசுவதற்கான ஆதாரமாகும்
        1. 2 கொரிந்தியர் 2:14
        2. 2 கொரிந்தியர் 9:15
        3. கொலோசெயர் 3:17
    2. இது ஊழியத்திற்கான சரியான நோக்கம், 1 கொரி. 1: 4
    3. இது சொர்க்கத்தின் தொடர்ச்சியான கருப்பொருள்:
        1. வெளிப்படுத்துதல் 4: 9
        2. வெளிப்படுத்துதல் 7:12
        3. வெளிப்படுத்துதல் 11:17
    4. இது விசுவாசிகளின் தொடர்ச்சியான கருப்பொருள்
        1. கொலோசெயர் 2: 7

2. கொலோசெயர் 3:17

3. கொலோசெயர் 4: 2

வேதாகம ஆதாரம்

1. பழைய ஏற்பாடு

1. இரண்டு அடிப்படை சொற்கள்

1. *yadah* (BDB 392, KB 398), அதாவது புகழ்தல்

2. *todah* (BDB 392, KB 1695), அதாவது நன்றி செலுத்துதல். இது வழக்கமாக செலுத்தப்படும் பலிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது (ஒ.பா. 2 நாளா. 29:31; 33:16)

2. தாவீது தேவனைப் புகழ்வதற்கும் நன்றி செலுத்துவதற்கும் சிறப்பு லேவியர்களை நியமித்தார். இதை சாலொமோன், எசேக்கியா மற்றும் நெகேமியா தொடர்ந்தனர்.

1. 1 நாளாகமம் 16: 4,7,41

2. 1 நாளாகமம் 23:30

3. 1 நாளாகமம் 25: 3

4. 2 நாளாகமம் 5:13

5. 2 நாளாகமம் 7: 6

6. 2 நாளாகமம் 31: 2

7. நெகேமியா 11:12

8. நெகேமியா 12: 24,27,31,38,46

3. திருப்பாடல்கள் என்பது இஸ்ரேலின் புகழ்ச்சி மற்றும் நன்றிகளின் தொகுப்பாகும்.

1. உடன்படிக்கைக்கு உண்மையாக இருந்ததற்காக YHWH க்கு நன்றி.

1. சங்கீதம் 107: 8

2. சங்கீதம் 103: 1f

3. சங்கீதம் 138: 2

2. தேவாலய ஊர்வலத்தின் ஒரு பகுதியாக நன்றி செலுத்துதல் இருந்தது

1. சங்கீதம் 95: 2

2. சங்கீதம் 100: 4

3. தியாகங்களுடன் நன்றி செலுத்துதல்

1. சங்கீதம் 26: 7

2. சங்கீதம் 122: 4

4. YHWH இன் செயல்களுக்கு நன்றி

1. எதிரிகளிடமிருந்து விடுவித்தல்

1. சங்கீதம் 7:17
2. சங்கீதம் 18:49
3. சங்கீதம் 28: 7
4. சங்கீதம் 35:18
5. சங்கீதம் 44: 8
6. சங்கீதம் 54: 6
7. சங்கீதம் 79:13
8. சங்கீதம் 118: 1,21,29
9. சங்கீதம் 138: 1

2. சிறையிலிருந்து விடுவித்தல் (உருவகம்), சங்கீதம் 142: 7

3. மரணத்திலிருந்து விடுவித்தல்

1. சங்கீதம் 30: 4,12
2. சங்கீதம் 86: 12-13
3. ஏசாயா 38: 18-19

4. அவர் துன்மார்க்கரைக் கீழே தள்ளி, நீதிமான்களை உயர்த்துகிறார்

1. சங்கீதம் 52: 9
2. சங்கீதம் 75: 1
3. சங்கீதம் 92: 1
4. சங்கீதம் 140: 13

5. அவர் மன்னிக்கிறார்

1. சங்கீதம் 30: 4
2. ஏசாயா 12: 1

6. அவர் தம் மக்களுக்கு வழங்குகிறார்

1. சங்கீதம் 106: 1 எஃப்
2. சங்கீதம் 111: 1
3. சங்கீதம் 136: 1,26
4. சங்கீதம் 145: 10
5. எரேமியா 33:11

2. புதிய ஏற்பாடு

1. நன்றி மற்றும் நன்றி செலுத்துவதற்கு பயன்படுத்தப்படும் முக்கிய சொல் (சில குறிப்புகள்)

1. *eucharisteō* (ஒ.பா. 1 கொரி. 1: 4,14; 10:30; 11:24; 14: 17,18; கொலோ 1: 3,12; 3:17)
2. *eucharistos* (ஒ.பா. Col. 3:15)
3. *eucharistia* (ஒ.பா. 1 கொரி. 14:16; 2 கொரி. 4:15; 9: 11,12; கொலோ. 2: 7; 4: 2)
4. *charis* (ஒ.பா. 1 கொரி. 15:57; 2 கொரி. 2:14; 8:16; 9:15; 1 பேதுரு 2:19)

2. இயேசுவின் உதாரணம்

1. அவர் உணவுக்கு நன்றி தெரிவித்தார்:

1. லூக்கா 22: 17,19 (1 கொரி. 11:24)
2. யோவான் 6: 11,23

2. பதிலளித்த ஜெபத்திற்கு அவர் நன்றி கூறினார், யோவான் 11:41

3. நன்றியுணர்வின் பிற எடுத்துக்காட்டுகள்

1. தேவனின் பரிசாகிய கிறிஸ்துவிற்காக, 2 கொரி. 9:15
2. உணவுக்காக

1. அப்போஸ்தலர் 27:35
2. ரோமர் 14: 6
3. 1 கொரிந்தியர் 10:30; 11:24
4. 1 தீமோத்தேயு 4: 3-4

3. குணப்படுத்தியதற்காக, லூக்கா 17:16
4. அமைதிக்காக, அப்போஸ்தலர் 24: 2-3
5. ஆபத்திலிருந்து விடுவிப்பதற்காக

1. அப்போஸ்தலர் 27:35

2. அப்போஸ்தலர் 28:15

6. எல்லா சூழ்நிலைகளுக்கும், பிலிப்பியர் 4: 6

7. எல்லா மனிதர்களுக்கும், குறிப்பாக தலைவர்களுக்கு, 1 தீமோ. 2: 1-2

4. நன்றியுணர்வின் பிற அம்சங்கள்

1. இது எல்லா விசுவாசிகளுக்குமான தேவனுடைய சித்தம், 1 தெசலோனிக்கேயர் 5:18

2. இது ஆவியால் நிரப்பப்பட்ட வாழ்க்கைக்கு ஒரு சான்று, எபேசியர் 5:20

3. இதை புறக்கணிப்பது பாவம்

1. லூக்கா 17: 16-17

2. ரோமர் 1:21

4. இது பாவத்திற்கான ஒரு மருந்தாகும், எபேசியர் 5: 4

5. பவுலின் நன்றியுணர்வு

1. சபையில் அவரது ஆசீர்வாதம்

1. நற்செய்தியை அறிவிப்பதற்காக

1. ரோமர் 1: 8

2. கொலோசெயர் 1: 3-4

3. எபேசியர் 1: 15-16

4. 1 தெசலோனிக்கேயர் 1: 2

2. வழங்கப்பட்ட கிருபைக்காக

1. 1 கொரிந்தியர் 1: 4

2. 2 கொரிந்தியர் 1:11; 4:15

1. சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டதற்காக, 1 தெச. 2:13

2. சுவிசேஷத்தைப் பரப்புவதில் கொண்ட ஐக்கியத்திற்காக, பிலிப்பியர் 1: 3-5

3. கிருபையில் வளர்வதற்காக, 2 தெச. 1: 3

4. தெரிந்துக் கொள்ளப்பட்டதின் அறிவுக்கு, 2 தெச2:13

5. ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக, கொலோசெயர் 1:12; 3:15

6. கொடுப்பதில் தாராளமயமாவதற்கு, 2 கொரிந்தியர் 9: 11-12

7. புதிய விசுவாசிகள் மீது மகிழ்ச்சிக்காக, 1 தெச3: 9

2. அவரது தனிப்பட்ட நன்றி

1. விசுவாசியாக இருப்பதால் , கொலோசெயர் 1:12

2. பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக, ரோமர் 7:25; 2 கொ. 2:14

3. மற்ற விசுவாசிகளின் தியாக உழைப்புக்காக, ரோமர் 16: 4; 2 கொ. 8:16

4. நிகழாத சில செயல்களுக்கு, 1 கொரிந்தியர் 1:14

5. தனிப்பட்ட ஆவிக்குரிய வரங்களுக்காக, 1 கொரிந்தியர் 14:18

6. நண்பர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு, பிலேமோன் 4-5

7. ஊழியத்திற்கான உடல் வலிமைக்காக, 1 தீமோத்தேயு 1:12

முடிவுரை

1. நாம் இரட்சிக்கப்பட்டவுடன் தேவனுக்கு நாம் அளிக்கும் இதயபூர்வ பதில் நன்றி. இது வாய்மொழி ஒப்புதலில் மட்டுமல்ல, வாழ்க்கை முறை நன்றியுணர்வையும் வெளியிடுகிறது.

2. தேவனுக்கு எல்லாவற்றிலும் நன்றி செலுத்துவது தேவனின் பராமரிப்பில் உள்ள முதிர்ந்த வாழ்க்கையின் குறிக்கோள் (ஒ.பா. 1 தெச. 5: 13-18).

3. நன்றி செலுத்துதல் என்பது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் தொடர்ச்சியான கருப்பொருள். இது உங்களுடைய கருப்பொருளா?

Copyright © 2014 Bible Lessons International

▣ "**நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து,**" இது நிகழ்கால நடுத்தர தெரிநிலை எச்ச வினையாகும், இது தொடர்ந்து ஜெபம் செய்ய பவுல் எடுத்த ஒரு குறிக்கோள் முடிவைக் குறிக்கிறது. பவுலின் ஜெபத்தின் செயற்கையான கட்டமைப்பை மூன்று சார்பு உட்பிரிவுகளில் காணலாம்: (1) குறிப்பிடுவது (1 தெச. 1: 2); (2) தொடர்ந்து மனதில் வைத்திருத்தல் (1 தெச. 1: 3); மற்றும் (3) அறிதல் (1 தெச. 1: 4).

**SPECIAL TOPIC: INTERCESSORY PRAYER**

**சிறப்பு தலைப்பு: பரிந்துபேசும் ஜெபம்**

முன்னுரை

1. இயேசுவின் முன்மாதிரியால் ஜெபம் முக்கியமானது
    1. தனிப்பட்ட ஜெபம், மாற்கு 1:35; லூக்கா 3:21; 6:12; 9:29; 22: 31-46
    2. ஆலயத்தை சுத்தப்படுத்துதல், மத். 21:13; மாற்கு 11:17; லூக்கா 19:46
    3. மாதிரி ஜெபம், மத். 6: 5-13; லூக்கா 11: 2-4
2. ஜெபம் என்பது நம் சார்பாகவும் மற்றவர்களுக்காகவும் செயல்பட தயாராக உள்ள ஒரு தனிப்பட்ட, அக்கறையுள்ள தேவன் மீதுள்ள நம்முடைய நம்பிக்கையை நிலையான செயலுக்கு ஜெபத்தினூடாக செய்தலாகும்.
3. தேவன் தனது பிள்ளைகளின் ஜெபங்களை நிறைவேற்ற தனிப்பட்ட முறையில் பல விதங்களில் தன்னை மட்டுப்படுத்தியுள்ளார் (ஒ.பா. யாக்கோபு 4: 2)
4. ஜெபத்தின் முக்கிய நோக்கம், திரித்துவ தேவனுடன் நம்முடைய ஐக்கியம் மற்றும் நேரத்தை செலவழிதல் ஆகும்.
5. ஜெபத்தின் நோக்கம் விசுவாசிகள் சம்பந்தப்பட்ட எதையும் அல்லது எவரையும் குறிக்கிறது. சிந்தனை அல்லது கவலை திரும்பும்போது நாம் ஒரு முறை ஜெபிக்கலாம், விசுவாசிக்கலாம் அல்லது மீண்டும் மீண்டும் ஜெபிக்கலாம்.
6. பிரார்த்தனை பல கூறுகளை உள்ளடக்கியது
    1. திரித்துவ தேவனை புகழ்வதும் வணங்குவதும்
    2. தேவனின் பிரசன்னம், ஐக்கியம் மற்றும் ஏற்பாடுகளுக்கு நன்றி செலுத்துதல்
    3. கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் நம்முடைய பாவத்தின் அறிக்கை.
    4. நம்முடைய உணதப்பட்ட தேவைகள் அல்லது ஆசைகளின் விண்ணப்பம்.
    5. பிதாவுக்கு முன்பாக வைக்கும் மற்றவர்களுக்கான வைகளின் பரிந்துரை.
7. பரிந்துப்பேசும் ஜெபம் என்பது ஒரு மறைபொருளாகும். ம் நமக்கு ஜெபிப்பதை விட மற்றவர்களுக்கு ஜெபிக்கிறவர்களை தேவன் அதிகம் நேசிக்கிறார். யினும், நம்முடைய ஜெபங்கள் பெரும்பாலும் நம்மில் மட்டுமல்ல, மற்றவர்களிலும் ஒரு மாற்றத்தை, பதிலை அல்லது தேவையை பாதிக்கும்.

வேதாகமச் சான்று

1. பழைய ஏற்பாடு

1. பரிந்துபேசும் ஜெபத்தின் சில எடுத்துக்காட்டுகள்:

1. ஆபிரகாம் சோதோமுக்காக மன்றாடுகிறார், ஆதி. 18: 22 எஃப்

2. இஸ்ரவேலுக்காக மோசேயின் ஜெபங்கள்

1. யாத்திராகமம் 5: 22-23

2. யாத்திராகமம் 32: 9-14,31-35

3. யாத்திராகமம் 33: 12-16

4. யாத்திராகமம் 34: 9

5. உபாகமம் 9: 18,25-29

3. சாமுவேல் இஸ்ரேலுக்காக ஜெபிக்கிறார்

1. 1 சாமுவேல் 7: 5-6,8-9

2. 1 சாமுவேல் 12: 16-23

3. 1 சாமுவேல் 15:11

4. தாவீது தன் குழந்தைக்காக, 2 சாமுவேல் 12: 16-18

2. தேவன் பரிந்துரையாளர்களைத் தேடுகிறார், ஏசாயா 59:16

3. அறியப்பட்ட, அறிக்கைப்பண்ணப்படாத பாவம் அல்லது மனந்திரும்பாத குணாதிசயங்கள் நம் ஜெபங்களை பாதிக்கிறது

1. சங்கீதம் 66:18

2. நீதிமொழிகள் 28: 9

3. ஏசாயா 59: 1-2; 64: 7

2. புதிய ஏற்பாடு

1. குமாரனதும் ஆவியினதும் பரிந்துரை

1. இயேசு

1. ரோமர் 8:34

2. எபிரேயர் 7:25

3. 1 யோவான் 2: 1

2. பரிசுத்த ஆவியானவர், ரோமர் 8: 26-27

2. பவுலின் பரிந்துரை ஊழியம்

1. யூதர்களுக்காக ஜெபிக்கிறார்

1. ரோமர் 9: 1 எஃப்
2. ரோமர் 10: 1

2. தேவாலயங்களுக்காக ஜெபிக்கிறார்

1. ரோமர் 1: 9
2. எபேசியர் 1:16
3. பிலிப்பியர் 1: 3-4,9
4. கொலோசெயர் 1: 3,9
5. 1 தெசலோனிக்கேயர் 1: 2-3
6. 2 தெசலோனிக்கேயர் 1:11
7. 2 தீமோத்தேயு 1: 3
8. பிலேமோன், வ. 4

3. பவுல் அவருக்காக ஜெபிக்கும்படி சபைகளிடம் வேண்டினார்.

1. ரோமர் 15:30
2. 2 கொரிந்தியர் 1:11
3. எபேசியர் 6:19
4. கொலோசெயர் 4: 3
5. 1 தெசலோனிக்கேயர் 5:25
6. 2 தெசலோனிக்கேயர் 3: 1

3. சபையின் பரிந்துரை ஊழியம்

1. ஒருவருக்கொருவர் ஜெபியுங்கள்

1. எபேசியர் 6:18
2. 1 தீமோத்தேயு 2: 1
3. யாக்கோபு 5:16

4. சிறப்பு குழுக்களுக்கு ஜெபம் கோரப்பட்டது

1. நம்முடைய எதிரிகள், மத். 5:44
2. கிறிஸ்தவ தொழிலாளர்கள், எபிரேயர் 13:18
3. ஆட்சியாளர்கள், 1 தீமோத்தேயு 2: 2
4. நோய்வாய்ப்பட்டவர்கள், யாக்கோபு 5: 13-16
5. பின்வாங்குவோர், 1 யோவான் 5:16

பதிலளிக்கப்பட்ட ஜெபத்திற்கான நிபந்தனைகள்

1. கிறிஸ்துவுடனும் ஆவியுடனும் எங்கள் உறவு
    1. அவரிடத்தில் நிலைத்திரு, யோவான் 15: 7
    2. அவருடைய பெயரில், யோவான் 14: 13,14; 15:16; 16: 23-24
    3. ஆவியினால், எபேசியர் 6:18; யூதா 20
    4. தேவனுடைய சித்தத்தின்படி, மத்தேயு 6:10; 1 யோவான் 3:22; 5: 14-15
2. நோக்கங்கள்
    1. அசைவதில்லை, மத்தேயு 21:22; யாக்கோபு 1: 6-7
    2. பணிவு மற்றும் மனந்திரும்புதல், லூக்கா 18: 9-14
    3. தவறாக கேட்பது, யாக்கோபு 4: 3
    4. சுயநலம், யாக்கோபு 4: 2-3
3. பிற அம்சங்கள்
    1. தொடர்ந்து நிலைத்திரு
        1. லூக்கா 18: 1-8
        2. கொலோசெயர் 4: 2
    2. கேட்டுக்கொண்டே இருத்தல்
        1. மத்தேயு 7: 7-8
        2. லூக்கா 11: 5-13
        3. யாக்கோபு 1: 5
    3. வீட்டில் கருத்து வேறுபாடு, 1 பேதுரு 3: 7
    4. அறியப்பட்ட பாவத்திலிருந்து விடுபடலாம்
        1. சங்கீதம் 66:18
        2. நீதிமொழிகள் 28: 9
        3. ஏசாயா 59: 1-2
        4. ஏசாயா 64: 7

இறையியல் முடிவுரை

1. என்ன ஒரு பாக்கியம். என்ன ஒரு வாய்ப்பு. என்ன ஒரு கடமை மற்றும் பொறுப்பு
2. இயேசு எங்கள் மாதிரி. ஆவி எங்கள் வழிகாட்டி. தந்தை ஆவலுடன் காத்திருக்கிறார்.

3. இது உங்களையும், உங்கள் குடும்பத்தையும், உங்கள் நண்பர்களையும், உலகத்தையும் மாற்றும்.

Copyright © 2014 Bible Lessons International

1:3 "**இடைவிடாமல் நினைவுகூர்ந்து**" இது நிகழ்கால கட்டளை செய்வினையாகும். இது பவுலின், விசுவாசிகள் மீதான தீவிரமான, நிலையான அக்கறையை காட்டுகிறது. எல்லா சபையினனருக்கும் செய்ததைப் போலவே அவர் இந்த மனமாரியவர்களுக்காக தேவனைப் பற்றி சிந்தித்து அடிக்கடி நன்றி கூறினார் (ஒ.ஒ.பா. ரோமர் 1: 9; எபே. 1:16; பிலி. 1: 3-4; கொலோ. 1: 9; 2 தீமோ. 1: 3; பிலேமோன் வ.4).

NASB, NRSV " **உங்கள் நம்பிக்கையின் கிரியை மற்றும் அன்பின் பிரயாசம் மற்றும் நம்பிக்கையின் உறுதியானது**"
NKJV " **உங்கள் நம்பிக்கையின் கிரியை மற்றும் அன்பின் பிரயாசம் மற்றும் நம்பிக்கையின் பொறுமை**"
TEV " **உங்கள் விசுவாசத்தை நீங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தினீர்கள், உங்கள் அன்பு உங்களை எவ்வாறு கடினமாக உழைக்க வைத்தது, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் உங்கள் நம்பிக்கை எவ்வாறு உறுதியானது**"
NJB" **செயலில் உங்கள் நம்பிக்கை, அன்பிற்காக உழைத்தது மற்றும் நம்பிக்கையின் மூலம் விடாமுயற்சி**"

இந்த மூன்று சொற்றொடர்களும் ஒவ்வொன்றும் ஒரு இலக்கண கட்டமைப்பில் உள்ளன, இது கிரியை விசுவாசத்தினால் உருவாகிறது, பிரயாசம் அன்பினால் உருவாகிறது, உறுதி நம்பிக்கையால் உருவாகிறது. ஈடுப்பதிலுள்ள, உண்மையுள்ள விசுவாசிகள் மீது கவனம் செலுத்தப்படுகிறது. விசுவாசம் எப்போதும் தேவனின் ஆரம்ப செயலுக்கு ஒரு பிரதிபலிப்பாகும்.

இந்த குணாதிசயங்கள் பவுல் தேவனுக்கு நன்றி செலுத்துவதன் அடிப்படையாக அமைகின்றன. எபே 2: 8-10-ல், கிருபையும் விசுவாசமும் நற்செயல்களுடன் தொடர்புடையவை. இந்த மூன்று சொற்களும் (விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு) பெரும்பாலும் புதிய ஏற்பாட்டில் தொடர்புப்படுத்தப்பட்டுள்ளன (ஒ.பா. ரோமர் 5: 2-5; 1 கொரி. 13:13; கலா. 5: 5-6; கொலோ. 1: 4-5 ; 1 தெச. 5: 8; எபி. 6: 10-12; 10: 22-24; 1 பேது. 1: 21-22). ஒழுங்கு வரிசை பெரும்பாலும் வேறுபடுகிறது. இந்த சூழல் அமைவில் "விசுவாசம்" என்பது கோட்பாட்டைக் குறிக்கவில்லை (ஒ.பா. யூதா 1: 3, 20), ஆனால் தனிப்பட்ட நம்பிக்கையை குறிக்கிறது (ஒ.பா. 1 தெச. 1: 8). கலா 3: 6 இல் சிறப்பு தலைப்பைக் காண்க.

▫ "**பிரயாசம்**" "பிரயாசம்" என்பது மிகவும் தீவிரமான சொல் - கிறிஸ்தவம் செயற்பாட்டு அல்ல. செய்வினை (ஒ.பா. 1 கொரி. 15:58).

▫ "**பொறுமை**" இது ஒரு செயற்பாட்டு கருத்து அல்ல, ஆனால் சோதனைகளை எதிர்கொள்ளும் போது செயலில், தன்னார்வமாக, உறுதியான சகிப்புத்தன்மையுடன் காணப்படல் வேண்டும் (ஒ.பா. லூக். 21:19; ரோமர் 5: 3-4). இது ஒரு தேவையைப் பார்த்து, பின்னர் தேவைப்படும் போது தானாக முன்வந்து சுமையைச் சுமக்க உதவுகிறது (ஒ.பா. 2 தெச. 1: 4).

▫ "**நம்பிக்கை... நம்முடைய தேவனுக்குமுன்பாக**" இந்த நிருபத்தின் முக்கிய கருப்பொருளான *Parousia* அல்லது இரண்டாவது வருகையை இது குறிக்கிறது (ஒ.பா. 1 தெச. 1:10; 3:13; 4: 13-5: 11; 5:32; 2 தெச. 1: 7,10). ஒவ்வொரு அதிகாரமும் இந்த விஷயத்தைப்

பற்றி விவாதிப்பதை கவனியுங்கள் "நம்பிக்கை" என்பது ஆங்கிலத்தில் உள்ளதைப் போல சந்தேகத்திற்கிடமான "ஒருவேளை" அல்லது "இருக்கலாம்" என்ற பொருளைக் கொண்டிருக்கவில்லை, மாறாக தெளிவற்ற கால உறுப்புடன் ஒரு நிகழ்வின் எதிர்பார்ப்பாகக் காணப்பட்டது. சிறப்பு தலைப்பைக் காண்க: கலாத்தியர் 5: 5 இல் நம்பிக்கை.

**1: 4 "அறிந்து"** இது 1 தெச. 1: 2-ல் பவுலின் ஜெபத்துடன் தொடர்புடைய மூன்று பங்கேற்புகளில் மூன்றாவதாகும்.

▣ **"தேவனுக்குப் பிரியமான சகோதரரே"** சொல்லர்த்தமாக "தெய்வீக அன்பைப்பெற்றவர்கள்" எனலாம். இந்த செயப்பாட்டு எச்ச வினை முற்று சொற்றொடர் இறையியல் ரீதியாக அவர்களின் தேர்தலுடன் இணைக்கப்பட்டுள்ளது (ஒ. பா. எபே. 1: 4-5). விசுவாசிகள் "அன்புக்குரியவர்கள்" என்று அந்தஸ்தை தொடர்ந்து வலியுறுத்துகிறது. அன்பின் முகவர் தேவன். "பிரியமானவர்" *(agapētos)* என்ற வினையெச்சம் பொதுவாக இயேசுவின் மீதுள்ள பிதாவின் அன்புக்குப் பயன்படுத்துகிறது (ஒ.பா. மத். 3:17; 12:18; 17: 5; எபே 1: 6). விசுவாசத்தினால் அவரை நம்புகிறவர்களுக்கும், இப்போது பிதாவினால் அன்பு செய்யப்படுகிறவர்களுக்கும் இது பயன்படுத்தப்படுகிறது (ஒ.பா. ரோமர் 1: 7; கொலோ. 3:12; 2 தெச. 2:13).

**NASB "நீங்கள் அவரது தெரிவு"**
**NKJV "தேவனால் நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்"**
**NRSV "அவர் உங்களைத் தேர்ந்தெடுத்தார்"**
**TEV "தேவன் ... உங்களைத் தேர்ந்தெடுத்தார்"**
**NJB "நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள்"**

எந்த வினைச்சொல்லும் தோன்றவில்லை என்றாலும் ("உங்களைத் தேர்ந்தெடுப்பது" என்ற பெயர்ச்சொல் சொற்றொடர் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது), கிறிஸ்துவில் உள்ள தேவனே இச்செயலின் முகவர், இது முந்தைய வினைச்சொல்லில் உள்ள செயலற்ற குரலால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் குறிப்பாக தேவனுடன் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தேவனின் ஆரம்ப அன்பு மற்றும் தெரிவின் இறையியல் அவசியத்தையும் வலியுறுத்துகிறது (ஒ.பா. யோவான் 6: 44,65). அவர்கள் சுவிசேஷத்திற்கு பதிலளித்ததால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதை பவுல் அறிந்திருந்தார்! 1 தெச 1: 5 ல் வெளிப்படுத்தப்பட்ட அவருடைய வல்லமையான செயல்களால் தேவனின் தேர்வு உறுதிப்படுத்தப்பட்டது. தேர்தல் என்பது பரிசுத்தத்திற்கான (ஒ.பா. எபே. 1: 4) மற்றும் ஊழியத்திற்கான (ஒ.பா. கொலோ. 3: 12-14; 2 பேது. 1: 2-11) அழைப்பாகும்.

**SPECIAL TOPIC: ELECTION**

### சிறப்பு தலைப்பு: தெரிந்துக்கொள்ளப்படல்

தெரிந்துக்கொள்ளப்படல் ஒரு அற்புதமான கோட்பாடாகும். இருப்பினும், இது சாதகத்திற்கான அழைப்பு அல்ல, ஆனால் ஒரு சாதனமாக, மற்றவர்களின் மீட்பின் ஒரு கருவியாக அல்லது வழிமுறையாக இருக்க வேண்டும்! பழைய ஏற்பாட்டில் இந்த சொல் முதன்மையாக ஊழியத்திற்குப் பயன்படுத்தப்பட்டது; புதிய ஏற்பாட்டில் இது முதன்மையாக ஊழியத்தினால் வழங்கப்பட்ட இரட்சிப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றது. தேவனின் இறையாண்மைக்கும் மனிதனின் சுதந்திரத்திற்கும் இடையிலான முரண்பாட்டை வேதம் ஒருபோதும் சரிசெய்ய முற்படவில்லை, ஆனால் அவை இரண்டையும் உறுதிப்படுத்துகிறது! வேதாகம

அழுத்தத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு தேவனின் இறையாண்மை தெரிவில் ரோமர் 9 மற்றும் மனிதனின் தேவையான பதிலில் ரோமர் 10 (ஒ.பா. ரோமர் 10: 11,13).

இந்த இறையியல் அழுத்தத்தின் திறவுகோல் எபே 1: 4 இல் காணப்படலாம். இயேசு தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர், அனைவரும் அவரிடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் (Karl Barth). வீழ்ச்சியடைந்த மனிதகுலத்தின் தேவைக்கு இயேசு தேவனின் "ஆம்" ஆவார் (Karl Barth). முற்குறிப்பின் நோக்கம் பரலோகம் அல்ல, பரிசுத்தம் (கிறிஸ்துவின் சாயல்) என்று வலியுறுத்துவதன் மூலம் எபேசியர் 1: 4ஐ தெளிவுபடுத்த உதவுகிறது. நாம் பெரும்பாலும் நற்செய்தியின் நன்மைகளுக்கு ஈர்க்கப்படுகிறோம், பொறுப்புகளை புறக்கணிக்கிறோம்! தேவனின் அழைப்பு (தெரிந்துக்கொள்ளப்படல்) இக்காலத்திற்கும் நித்தியத்திற்குமாகும்!

மூல உபதேசங்கள் பிற சத்தியங்களுடன் தொடர்புடையவை, தனியான, தொடர்பில்லாத சத்தியங்களாக இருக்காது. ஒரு நல்ல ஒப்பீடு, ஒரு நட்சத்திரத்திற்கு எதிராக ஒரு விண்மீன் தொகுப்பாக இருக்கும். தேவன் சத்தியத்தை கிழக்கில் முன்வைக்கிறார், மேற்கத்திய, பாணியில் அல்ல. மூல உபதேசச் சத்தியங்களின் பன்மொழி வழக்கு (முரண்பாடான) ஜோடிகளால் ஏற்படும் அழுத்தத்தை நாம் அகற்றக்கூடாது (தேவன் எல்லைக்கு அப்பாற்பட்டவர் எதிர் தேவன் சமீபமானவர். உதாரணமாக பாதுகாப்பு எதிர் நிலைநிறுத்தல்; பிதாவுக்கு சமமான இயேசு எதிர் பிதாவுக்கு அடிபணிந்த இயேசு. கிறிஸ்தவ சுதந்திரம் எதிர் கிறிஸ்தவ உடன்படிக்கை பங்களருக்கான பொறுப்பு போன்றவை).

"உடன்படிக்கை" என்ற இறையியல் கருத்து தேவனின் இறையாண்மையை (அவர் எப்போதும் ஆரம்ப முயற்சி எடுத்து நிகழ்ச்சி நிரலை அமைத்துக்கொள்கிறார்) கட்டாயமாக ஆரம்ப மற்றும் தொடர்ச்சியான மனந்திரும்புதலுடன், மனிதனிலிருக்கும் விசுவாச பதிலுடன் ஒன்றிணைக்கிறது (ஒ.பா. மாற்கு 1:15; அப்போஸ்தலர் 3: 16,19; 20:21). முரண்பாட்டின் ஒரு பக்கத்தையும், குறைமதிப்பீடு செய்யும், மறுவசனத்தையும் நிரூபிக்கும் வசனங்களை கையாளுவதில் கவனமாக இருங்கள்! உங்களுக்கு பிடித்த கோட்பாடு அல்லது இறையியல் முறையை மட்டுமே வலியுறுத்துவதில் கவனமாக இருங்கள்!

இந்த சிறப்பு தலைப்புகளைப் பார்க்கவும்

1. சிறப்பு தலைப்பு: தெரிந்துக்கொள்ளப்படல்/ முற்குறிப்பு மற்றும் ஒரு இறையியல் சமநிலையின் தேவை
2. சிறப்பு தலைப்பு: முற்குறிப்பு (கால்வினிசம்) எதிராக மனித சுதந்திரம் (ஆர்மீனியவாதம்)
3. சிறப்பு தலைப்பு: உடன்படிக்கை
4. சிறப்பு தலைப்பு: கிழகேத்தேய இலக்கியம் (வேதாகம முரண்பாடுகள்)

Copyright © 2014 Bible Lessons International

**1.5**
**NASB, NKJV "உங்களிடம் வசனத்தில் மாத்திரம் வரவில்லை"**

**NRSV** **"உங்களிடம் வந்தது வசனத்தில் மாத்திரல்ல"**
**TEV** **"வசனங்களால் மாத்திரல்ல"**
**NJB** **"இது உங்களுக்கு வசனங்களாக மாத்திரல்ல"**

ஒரு சுருக்கமான எண்ணத்தை விட, சுவிசேஷம் அவர்களின் வாழ்க்கையை மாற்றியது (ஒ.பா. ரோமர் 1:16; யாக்கோபு 2: 14-26). இன்றைய சுவிசேஷ பிரசங்கத்தில் இது உண்மையாக இருக்க வேண்டும். பரிசுத்தத் தன்மை என்பது ஒரு துல்லியமான கோட்பாடு மட்டுமல்ல, ஒரு குறிக்கோள் ஆகும் (ஒ.பா. ரோமர் 8: 28-29; கலா. 4:19; எபே 1: 4). சுவிசேஷம் என்பது (1) ஒரு நபரை வரவேற்றல், (2) அந்த நபரைப் பற்றிய சத்தியங்கள் விசுவாசிக்கப்பட வேண்டும், மற்றும் (3) அந்த நபரைப் பின்பற்றும் ஒரு வாழ்க்கை! இவை மூன்றும் முக்கியமானவை.

▣ **"வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும்"** தேவனின் தெரிவை உறுதிப்படுத்திய மூன்று தொடர்புடைய விடயங்கள் உள்ளன:

1. சுவிசேஷம் வார்த்தையில் வந்தது
2. சுவிசேஷம் அதிகாரத்தில் வந்தது
3. சுவிசேஷம் பரிசுத்த ஆவியிலிருந்து வந்தது

இது பின்வருவானவற்றைக் குறிக்கிறது (1) தெசலோனிக்கேய விசுவாசிகளுக்கு தனிப்பட்ட முறையில் என்ன நடந்தது அல்லது (2) பவுல் மூலமாக தேவனின் கிரியை (ஒ.பா. ரோமர் 8: 15-16). பவுலின் பிரசங்கம் மற்றும் படிப்பினை மூலம் சுவிசேஷத்தின் சத்தியம் மற்றும் ஆவிக்குரிய வல்லமை சக்திவாய்ந்த உறுதிப்படுத்தலாக இருந்தது.

▣ **"முழுநிச்சயத்தோடும்"** இந்த "முழுநிச்சயம்" (ஒ.பா. கொலோ. 2: 2; எபி. 6:11; 10:22) பவுலின் பிரசங்கத்தையோ அல்லது சுவிசேஷத்திற்க்கு அளிக்கப்பட தெசலோனிக்கேயரின் பதிலையோ குறிக்கலாம்.

▣ **"நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள்நிமித்தம் எப்படிப் பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே"** 1 தெச 2: 3-6-ல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுடன் ஒப்பிடும்போது, அவரும் அவருடைய ஊழியக் குழுவும் தெசலோனிக்கேயர்களிடையே (ஒ.பா. 1 தெச. 2: 7,10) செயல்பட்ட விதத்தை பவுல் வேறுபடுத்துகிறார். 2ம் அதிகாரத்தில் உள்ள வேறுபாடுகளைக் கவனியுங்கள்:

| <u>பவுல்</u> | <u>மற்றவர்கள்</u> |
|---|---|
| பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் | |
| தவறிலிருந்து அல்ல | |
| தூய்மையற்றதிலிருந்து அல்ல | தவறான |
| வஞ்சகத்தின் மூலம் அல்ல | தூய்மையற்ற |
| மனிதர்களை பிரியப்படுத்துகிறவர்கள் அல்ல | வஞ்சகத்தில் |
| பெருமை பேச்சு அல்ல | மனிதர்களை பிரியப்படுத்துகிறவர்கள் |
| பேராசைக்காக அல்ல | புகழ்ச்சி பேச்சு பேராசை |
| மகிமையைத் தேடவில்லை | மகிமையைத் தேடினார்கள் |

ஒரு மென்மையான பால்கொடுக்கும்
தாயைப் போல

ஒரு பாசம் கொண்ட

சுவிசேஷத்தையும் தங்களையும்
வழங்கினார்

பவுல் யூதர்களிடையே இருந்த கள்ளப் போதகர்களையும் பிரச்சனையாளர்களையும் பற்றி விவரிக்கிறார் (ஒ.பா. அப்போஸ்தலர் 17: 5).

**1:6 " நீங்களும்"** இது 1 தெச 1: 2-5 இன்" நாங்கள் " என்ற வசனத்திற்கான உறுதியான மாறுபாடாகும்"

**NASB, NRSV "நீங்களும் எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுபவர்களாகிவிட்டீர்கள்"**
**NKJV "எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி"**
**TEV "நீங்கள் எங்களையும் கர்த்தரையும் பின்பற்றினீர்கள்"**
**NJB "நீங்கள் எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுபவர்களாக ஆக வழிவகுத்தீர்கள்"**

"பின்பற்றுபவர்கள்" ஆங்கிலத்தில் "mimic" என்று பொருள்படும் (ஒ.பா. கிரேக்க சொல் மற்றும் கருத்து பின்வரும் இடங்களில் காணப்படுகின்றது 1 தெச. 1: 6; 2:14; 2 தெச. 3: 7,9; 1 கொரி. 4:16; 11: 1; கலா. 4:12; பிலி. 3:17; 4: 9). ஒவ்வொரு விசுவாசிக்குமான தேவனின் நோக்கம் கிறிஸ்துவின் தன்மையாகும் (ஒ.பா. ரோமர் 8: 28-29; கலா. 4:19; எபே 1: 4). மனிதகுலத்தில் தேவனின் சாயல் மீட்டெடுக்கப்பட வேண்டும் (ஒ.பா. லேவி. 11:44; 19: 2; மத் 5:48; எபே 1: 4; 5: 1).

**NASB, NKJV "திருவசனத்தை ஏற்றுக்கொண்டு"**
**NRSV "நீங்கள் திருவசனத்தை பெற்றீர்கள்"**
**TEV "நீங்கள் செய்தியைப் பெற்றீர்கள்"**
**NJB "நீங்கள் சுவிசேஷத்திற்கு அழைத்துச் சென்றீர்கள்"**

இந்த வார்த்தைக்கான பொருள் "வரவேற்பு விருந்தினரைப் பெறுவதற்கு" (ஒ.பா. மத். 10: 40-41; 18: 5) அல்லது "ஒரு செய்தியைப் பெறுவதற்கு" ஆகும் (ஒ.பா. கொரி. 11: 4; யாக்கோபு 1:21). இது ஒரு இறந்தகால நடுத்தர (பெயரடை) எச்சவினையாகும். கிறிஸ்துவின் நிறைவேற்றப்பட்ட வேலை மூலமாய் பெற்ற தேவ அன்பிற்கு மனிதர்கள் மனந்திரும்புதலினாலும் விசுவாசத்தினாலும் பதிலளிக்க வேண்டும் (ஒ.பா. மாற்கு 1:15; யோவான் 1:12, 3:16; அப்போஸ்தலர் 3: 16,19; 20:21; ரோமர் 10: 9-. 13). இரட்சிப்பு என்பது (1) ஒரு செய்தி (மூல உபதேச சத்தியம்); (2) ஒரு நபர் (வாழ்வியல் சந்திப்பு); (3) வாழ ஒரு வாழ்க்கை (1 தெச. 1: 6). நாங்கள் நற்செய்தி செய்தியையும் இயேசுவுடன் நட்பையும் பெற்றுக் கொள்கிறோம். இரண்டையும் நாம் முழுமையாக நம்ப வேண்டும். இது விசுவாசம் மற்றும் பரிசுத்தத்தின் புதிய வாழ்க்கையில் விளைவாகிறது.

**NASB "மிகுந்த துன்பத்திலே"**
**NKJV "மிகுந்த உபத்திரவத்திலே"**
**NRSV "உபத்திரவத்திற்கு மத்தியிலும்"**
**TEV "நீங்கள் மிகவும் வருத்தப்பட்டாலும்"**

இது சொல்லார்த்தமாக "அழுத்துவது" எனப் பொருள்படும் (ஒ.பா. யோவான் 16:33; அப்போஸ்தலர் 14:22; 2 தெச. 1: 4,6). ஒரு கிறிஸ்தவராக மாறுவது பிரச்சனை இல்லாத வாழ்விற்கு உத்தரவாதம் அளிக்காது-மாறாக, இது முற்றிலும் நேர்மாறானது (ஒ.பா. மத் 5: 10-12; யோவான் 15: 18-19; ரோமர் 8:17; 1 பேதுரு 3: 13-17; 4: 12-19). அப்போஸ்தலர் 17 பவுலின் சில துன்புறுத்தல்களையும் (ஒ.பா. 2 கொரி. 4: 7-12; 6: 3-10; 11: 23-28) இந்த சபை அனுபவித்ததையும் விவரிக்கிறது.

▣ **"பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே"** ஆவியினால் வழங்கப்பட்ட இந்த சந்தோஷம் அனைத்தையும் உள்ளடக்கியது மற்றும் முழுமையானது, அது மிகுந்த துன்புறுத்தல் மற்றும் வேதனைகளுக்கு மத்தியிலும் இருக்கும். இது சூழ்நிலைகளால் பாதிக்கப்படாத மகிழ்ச்சி (ஒ.பா. ரோமர் 5: 2-5; 2 கொரி. 7: 4; 1 பேதுரு 4:13).

**1: 7 "நீங்கள் விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்"** சில வழிகளில் இது ஒரு உயர்வு நவிற்சியாகும், ஆனால் மற்றவழிகளில் மிகவும் சொல்லர்த்தமானது. உபத்திரவம் மற்றும் சோதனையின் மத்தியில் தெசலோனிக்கேய விசுவாசிகளின் மகிழ்ச்சியும் விடாமுயற்சியும் மற்ற விசுவாசிகளுக்கு பெரும் ஊக்கத்தை அளித்தது. யோபு, தீர்க்கதரிசிகள் (ஒ.பா. த் 5: 10,12), மேசியா, அப்போஸ்தலர்கள் ஆகியோரின் உபத்திரவங்களும் எதிர்கால விசுவாசிகளின் வாழ்வில் எவ்வாறு செல்வாக்கு செலுத்தின என்பது தெரிகின்றது. உபத்திரவம், வலி மற்றும் துன்புறுத்தல் காலங்களில் பெரும்பாலும் விசுவாசிகளின் மிகவும் வல்லமையான சாட்சியங்கள் வெளிப்பட்டன.

▣ **"முன்மாதிரி"** சிறப்பு தலைப்பைப் பார்க்கவும்.

## சிறப்பு தலைப்பு: முன்மாதிரி ***(tupos)***

**SPECIAL TOPIC: FORM (*tupos*)**

*Tupos* என்ற சொல் ஒரு பரந்த சொற்பொருளியல் புலத்தைக் கொண்டுள்ளது.

1. Moulton and Milligan, *The Vocabulary of the Greek New Testament*, p. 645
    1. முறை
    2. திட்டம்
    3. மாதிரி அல்லது எழுதும் முறை
    4. ஆணை அல்லது மறுசீரமைப்பு
    5. வசனம் அல்லது முடிவு
    6. குணப்படுத்தும் கடவுளுக்கு நேர்த்திக்கடனான மனித உடலின் மாதிரி
    7. வினைச்சொல் சட்டத்தின் கட்டளைகளைச் செயல்படுத்தும் பொருளில் பயன்படுத்தப்படுகிறது

2. Louw and Nida, *Greek-English Lexicon*, vol. 2, p. 249

1. காயம் (ஒ.பா. யோவான் 20:25)
2. சொரூபம் (ஒ.பா. ப்போஸ்தலர் 7:43)
3. மாதிரி (ஒ.பா. எபி. 8: 5)
4. உதாரணம் (ஒ.பா. 1 கொரி. 10: 6; பிலி. 3:17)
5. முன்னடையாளமானவன் (ஒ.பா. ரோமர் 5:14)
6. வகையான (ஒ.பா. அப்போஸ்தலர் 23:25)
7. உள்ளடக்கங்கள் (ஒ.பா. அப்போஸ்தலர் 23:25)

3. Harold K. Moulton, *The Analytical Greek Lexicon Revised*, p. 411

1. ஒரு அடி, ஒரு எண்ணம், ஒரு குறியீடு (ஒ.பா. யோவான் 20:25)
2. ஒரு சித்திரிப்பு
3. ஒரு சொரூபம் (ஒ.பா. அப்போஸ்தலர் 7:43)
4. ஒரு சூத்திரம், திட்டம் (ஒ.பா. ரோமர் 6:17)
5. மாதிரி, மூலக்கருத்து (ஒ.பா. அப்போஸ்தலர் 23:25)
6. உருவம், ஒத்தபிரதி (ஒ.பா. 1 கொரி. 10: 6)
7. ஒரு எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கை, வகை (ஒ.பா. ரோமர் 5:14; 1 கொரி. 10:11)
8. ஒரு மாதிரி முறை (ஒ.பா. அப்போஸ்தலர் 7:44; எபி. 8: 5)
9. ஒரு ஒழுக்க முறை (ஒ.பா. பிலி. 3:17; 1 தெச. 1: 7; 2 தெச. 3: 9; 1 தீமோ. 4:12; 1 பேதுரு 5: 3)

அகராதிகள் அர்த்தத்தை அமைக்காது; வாக்கியங்கள் / பந்திகளில் சொற்களின் பயன்பாடு மட்டுமே பொருளை அமைக்கிறது என நினைவில் கொள்ளவேண்டும், (அதாவது, சூழலமைவு). ஒரு வார்த்தைக்கு ஒரு தொகுப்பு வரைவிலக்கணத்தை கொடுப்பதில் கவனமாக இருத்தல் மற்றும் வேதாகமத்தில் சொல் நிகழும் ஒவ்வொரு இடத்திலும் அதைப் பயன்படுத்துதல், சூழலமைவு, சூழலமைவு, சூழலமைவு அர்த்தத்தை தீர்மானிக்கிறது!

Copyright © 2014 Bible Lessons International

▣ "**மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள**" இவை ரோம மாகாணங்கள் ஆகும். அகாயா நவீன கிரேக்கத்திற்குள் அமைந்துள்ளது; மக்கெதோனியா கலாச்சார ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ரோமர்களுடன்

தொடர்புடையதாக இருந்தாலும் கிரேக்கத்திலிருந்த ஒரு சுயாதீனமான அரசாங்கமாகும்.

**1:8 "தொனித்ததுமல்லாமல்"** இது சொல்பொருளாக "எக்காள முழக்கம் அல்லது "இடிமுழக்கம்" எனப்படுகின்றது. இது ஒரு செயற்பாட்டு சாதாரணநிலை முற்றுவினையாகும், இது சோதனைகளுக்கு மத்தியில் அவர்களின் மகிழ்ச்சியின் மூலம் நற்செய்தி "முன்னால் ஒலித்தது, இன்னும் ஒலிக்கிறது" என்பதைக் குறிக்கிறது. ஆங்கிலத்தில் இந்த கிரேக்க வார்த்தையிலிருந்து "எதிரொலி" என்ற வார்த்தையைப் பெறுகிறோம். 8-10 வசனங்கள் கிரேக்க மொழியில் ஒரு வாக்கியத்தை உருவாக்குகின்றன.

▣ **"ஆனால் ஒவ்வொரு இடத்திலும்"** இது 1 தெச. 1: 2 (ஒ.பா. ரோம.1: 8) ஐ ஒத்த ஒரு உருவக மிகைப்படுத்தல் (உயர்வு நவிற்சி) ஆகும். வேதாகமம் ஒரு கிழக்கேத்தயப் புத்தகமாக இருப்பதால், பெரும்பாலும் உருவகமொழியைப் பயன்படுத்துகிறது. மேற்கத்திய மொழியியலில் கவனமாக இருக்கவேண்டும்.

**SPECIAL TOPIC: EASTERN LITERATURE (biblical paradoxes)**

### சிறப்பு தலைப்பு: கிழக்கேத்திய இலக்கியம் (வேதாகம முரண்பாடுகள்)

1. இந்த உள்ளுணர்வு (அதாவது, வேதாகமம் ஒரு கிழக்கேத்தயப் புத்தகம், ஒரு மேற்கத்திய புத்தகம் அல்ல) தனிப்பட்ட முறையில், வேதாகமத்தை தேவனுடைய வார்த்தையாக நேசிக்கும் மற்றும் விசுவாசிக்கும் நபரானப்படியினால் எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. வேதாகமத்தை தீவிரமாக ஏற்றுக் கொள்ள முயற்சிக்கும் போது, வெவ்வேறு நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிகளில் சத்தியத்தை வெளிப்படுத்துகின்றன, முறையான வழிகளில் அல்ல. ஒரு ஏவப்பட்ட வார்த்தை மற்றொரு ஏவப்பட்ட வார்த்தையை ரத்து செய்யவோ அல்லது குறை மதிப்பீடு செய்யவோ முடியாது! முழு வேதகமத்தையும் அறிந்து கொள்வதில் சத்தியம் வெளிப்படுகிறது (எல்லா வேதகாமப் பகுதிகளும் ஏவப்பட்டவை, சிலவற்றில் மட்டுமல்ல, ஒ.பா. 2 தீமோ. 3: 16-17), அல்லது ஒரு பந்தியை மேற்கோள் காட்டுவதிலும் அல்ல (நிரூபிக்கும் வசனங்கள்)!

2. பெரும்பாலான வேதாகம சத்தியங்கள் (கிழக்கேத்தய இலக்கியம்) கிளைமொழிகளிலும் அல்லது முரண்பாடான ஜோடிககளிலும் வழங்கப்படுகின்றன (லூக்காவைத் தவிர புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள், எபிரேய சிந்தனையாளர்கள், பொதுவான கிரேக்க மொழியில் எழுதினார்கள் என நினைவில் கொள்ள வேண்டும். ஞான இலக்கியம் மற்றும் கவிதை இலக்கியம் ஆகியவை இணைவாதங்களில் சத்தியத்தை முன்வைக்கின்றன. முரண்பாடுகள் போன்ற இணக்கமற்ற இணைவாதமாக செயல்படுகிறது. இந்த முறையான இணைவாதமானது இணையான பந்திகளைப் போல செயல்படுகிறது). எப்படியோ இரண்டும் சமமான சத்தியம்! இந்த முரண்பாடுகள் நாம் விரும்பும், எளிமையான, மத மரபுகளுக்கு வேதனையளிக்கின்றன!
   1. முற்குறிப்பு எதிர் மனித தெரிவு சுயாதீனம்

2. விசுவாசியின் பாதுகாப்பு மற்றும் : உறுதியாய்த் தரித்திருத்தலின் தேவை (சிறப்பு தலைப்பு: : உறுதியாய்த் தரித்திருத்தலைப் பார்க்கவும்)
3. அசல் பாவம் மற்றும் சுய விருப்பமான பாவம்
4. இயேசு தேவனாக, எதிர் இயேசு மனிதனா
5. இயேசு பிதாவுக்கு சமமானவர், எதிர் இயேசு பிதாவுக்கு அடிபணிந்தவர்
6. தேவனுடைய வார்த்தையாக வேதாகமம், எதிர் மனித எழுத்தாளருக்கு
7. பாவமற்ற தன்மை (பரிபூரணவாதம், ஒ.பா. ரோமர் 6) எதிர் குறைவான பாவம்
8. ஆரம்ப உடனடி நீதிமனக்கப்படுத்தலுக்கும் பரிசுத்தமாக்குதலுக்கும், எதிர் படிப்படியான பரிசுத்தமாக்கப்படுதல் (சிறப்பு தலைப்பு: பரிசுத்தமாக்கப்படுதல் பார்க்கவும்)
9. விசுவாசத்தால் நீதிமனக்கப்படுத்தல் (ரோமர் 4) எதிர் கிரியைகளினால் உறுதிப்படுத்தப்பட்டு நீதிமனக்கப்படுத்தல் (ஒ.பா. யாக்கோபு 2: 14-26)
10. கிறிஸ்தவ சுதந்திரம் (ஒ.பா. ரோமர் 14: 1-23; 1 கொரி. 8: 1-13; 10: 23-33) எதிர் கிறிஸ்தவ பொறுப்பு (ஒ.பா. கலா. 5: 16-21; எபே. 4: 1)
11. தேவனின் எல்லைக்குட்படாதத் தன்மை எதிர் அவரது தூரமானவரல்ல தன்மை
12. தேவன் இறுதியில் அறியப்படாதவர் எதிர் வேதத்திலும் கிறிஸ்துவிலும் அறியப்படத்தக்கவர்.

    பவுலின் இரட்சிப்பைக் குறித்த பல உருவகங்கள்

    1. தத்தெடுத்தல்
    2. பரிசுத்தமாக்கப்படுதல்
    3. நீதிமானாக்கப்படுதல்
    4. மீட்பு
    5. மகிமைப்படுத்துதல்
    6. முற்குறிப்பு
    7. சீர்பொருந்துதல்
13. தேவனுடைய ராஜ்யம் தற்போதைய எதிர் எதிர்கால நிறைவுக்கு
14. தேவனின் பரிசாக மனந்திரும்புதல் (ஒ.பா. அப்போஸ்தலர் 11:18; ரோமர் 2: 4; 2 தீமோ. 2:25) எதிர் இரட்சிப்பின் கட்டாய பதிற்செயலாக மனந்திரும்புதல் ஒ.பா. மாற்கு 1:15; அப்போஸ்தலர் 20:21)
15. பழைய ஏற்பாடு நிரந்தரமானது எதிர் பழைய ஏற்பாடு நிறைவேறிற்று மற்றும் பூஜ்யமானது (ஒ.பா. மத் 5: 17-19 எதிராக மத். 5: 21-48; ரோமர் 7 எதிர் கலாத்தியர் 3)
16. விசுவாசிகள் ஊழியர்கள் / அடிமைகள் அல்லது பிள்ளைகள் / வாரிசுகள்

Copyright © 2014 Bible Lessons International

**NASB "அதனால் நாங்கள் எதுவும் சொல்லத் தேவையில்லை"**
**NKJV "அதனால் நாங்கள் எதுவும் சொல்ல வேண்டியதில்லை**

**NRSV "எனவே நாங்கள் அதைக்குறித்து ஒன்றும் சொல்லவேண்டியதாயிராதபடிக்கு"**
**TEV "அப்படியானால், நாங்கள் சொல்ல வேண்டியது எதுவும் இல்லை"**
**NJB "இதைப் பற்றி மற்றவர்களிடம் நாங்கள் சொல்லத் வேண்டியதில்லை"**

ஒரு தெளிவற்ற சொற்றொடர், பல மொழிபெயர்ப்புகள் முந்தைய பிரிவில் இருந்து "விசுவாசம்" என விவரிக்கின்றன. கிறிஸ்தவ மூல உபதேசத்தைப் பற்றியோ அல்லது உபாத்திரவதைப் பற்றியோ எல்லாவற்றையும் அவர்கள் புரிந்து கொண்டார்கள் என்று இது அர்த்தப்படுத்தவில்லை. ஆனால் சுவிசேஷம் உண்மையிலேயே அவர்களின் இதயங்களிலும் மனதிலும் வேரூன்றியிருப்பதை அவர்களின் வாழ்க்கை காட்டியது. பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷத்தின் அடிப்படைகளை ஒவ்வொரு ஏற்றுக்கொள்ளும் இதயத்திற்கும் வெளிப்படுத்துவார்.

**1:9 "நீங்கள் விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும்"** இது அவர்கள் புறமத விக்கிரகாராதனையிலிருந்து மனந்திரும்பியதைக் குறிக்கிறது. சுவிசேஷம் எதிர்மறையானம் நேர்மறையானதும் - மனந்திரும்புதலும் விசுவாசமும் (ஒ.பா. மாற்கு 1:15; அப்போஸ்தலர் 3:16, 19; 20:21). "ஒன்றிலிருந்து திரும்புதல்" மற்றும் "ஒன்றுக்கு திரும்புதல்" ஆகா உள்ளது.

தெசலோனிய மதமாற்றத்தின் மூன்று அழிவுகரமான சான்றுகள் இருந்தன என்பதை NASB Study Bible (பக். 1748) கவனித்து வெளிப்படுத்துகிறது

1. விக்கிரகங்களிலிருந்து திரும்புவது
2. தேவனை சேவித்தல்
3. கிறிஸ்துவின் வருகைக்காக காத்திருத்தல்

▫ **"ஊழியஞ்செய்வதற்கு" இதன் சொற் பொருள்** "அடிமை" என்பதாகும். இது நிகழ்கால முடிவிலியாகும்.
அவர்கள் விக்கிரகங்களிலிருந்து விலகி (இறந்தகாலம்) ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியம் செய்தார்கள் (ஒ.பா. ரோமர் 6:18). இது தேவனை ராஜாவாகவும், அவரைப் பின்பற்றுபவர்களை ஊழியர்களாகவும் சித்தரிக்கிறது. ஒரு விதத்தில், நாங்கள் அடிமைகள், மற்றொரு விதத்தில், நாங்கள் மகன்கள்.

▫ **" ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு"** இது தேவனின் உடன்படிக்கை பெயரான YHWH ஐ பிரதிபலிக்கிறது (ஒ.போ. யாத்திராகமம் 3:14). YHWH எப்போதும் வாழும், ஒரே உயிருள்ள தேவன். இது விவிலிய ஏகத்துவத்தின் அடிப்படையாகும் (ஒ.பா. உபா. 4: 35,39; 6: 4; ஏசா. 45: 5,6,18,21-22; 47: 8,10).

**SPECIAL TOPIC: THE NAMES FOR DEITY**

**சிறப்பு தலைப்பு: தெய்வத்திற்கான பெயர்கள்**

1. *El* (BDB 42, KB 48)
   1. தெய்வத்திற்கான பொதுவான பண்டைய வார்த்தையின் அசல் பொருள் நிச்சயமற்றது, இருப்பினும் பல அறிஞர்கள் இது அக்காடியன் மூலத்திலிருந்து வந்தது என்று நம்புகிறார்கள், "பலமானவராக இருக்க வேண்டும்" அல்லது "சக்திவாய்ந்தவராக இருக்க வேண்டும்" (ஒ.பா. ஆதி. 17: 1; எண் 23: 19; உபா 7:21; சங். 50: 1).

2. கானானிய பலதெய்வ வழிப்பாட்டில் உயர்ந்த கடவுள் El (Ras Shamra நூல்கள்), "தெய்வங்களின் பிதா " மற்றும் "பரலோக ஆண்டவர்" என்று அழைக்கப்படுகிறார்

3. வேதாகமத்தில் El பெரும்பாலும் பிற சொற்களுடன் கலக்கப்படுகிறது. இந்த சேர்க்கைகள் கடவுளின் தன்மையைக் குறிக்கும் ஒரு வழியாக மாறியது.

    1. *El-Elyon* ("உன்னதமான தேவன்," BDB 42 & 751 II), ஆதி,14: 18-22; உப. 32: 8; ஏசா. 14:14

    2. *El-Roi* ("காண்கிற தேவன்" அல்லது "தன்னை வெளிப்படுத்தும் தேவன்," BDB 42 & 909), ஆதி. 16:13

    3. *El-Shaddai* ("சர்வவல்லமையுள்ள தேவன்" அல்லது "எல்லா இரக்கத்தின் தேவன்" அல்லது "மலையின் தேவன்" BDB 42 & 994), ஆதி 17: 1; 35:11; 43:14; 49:25; யாத்திராகமம். 6: 3

    4. *El-Olam* ("நித்திய தேவன்," BDB 42 & 761), ஆதி 21:33. இந்த சொல் இறையியல் ரீதியாக தாவீதுக்கு தேவன் அளித்த வாக்குறுதியுடன் இணைக்கப்பட்டுள்ளது, 2 சாமு. 7: 13,16

    5. *El-Berit* ("உடன்படிக்கையின் தேவன்," BDB 42 & 136), நியா. 9:46

4. *El* பின்வருவானவற்றிட்கு சமானம்

    1. *YHWH*. எண். 23: 8; சங். 16: 1-2; 85: 8; ஈசா. 42: 5

    2. *Elohim* ஆதி. 46: 3; யோபு 5: 8, "நான் El, உங்கள் பிதாவின் எலோஹிம்"

    3. *Shaddai* ஆதி. 49:25; எண்.24: 4,16

    4. "எரிச்சலுள்ளவர்" யாத்.34:14; உப.4:24; 5: 9; 6:15

    5. "இறக்கமுள்ளவர்" உபா. 4:31; நெகே.9:31

    6. "சிறந்த மற்றும் அற்புதமான". உபா.7:21; 10:17; நெகே.1: 5; 9:32; தானி.9: 4

    7. "அறிவு" 1 சாமு.2: 3

    8. "என் பலமான அடைக்கலம்". 2 சாமு.22:33

    9. "எனக்காகப் பழிக்குப் பழிவாங்குபவர் " 2 சாமு.22:48

    10. "பரிசுத்தர்". ஏசா. 5:16

    11. "வலிமை". 10:21

    12. "என் இரட்சிப்பு" ஏசா. 12: 2

    13. "பெரிய மற்றும் வல்லமையான". எரே.32:18

    14. "சரிகட்டுகிறவர்" எரே 51:56

5. தேவனுக்கான அனைத்து முக்கிய பழைய ஏற்பாட்டு பெயர்களின் கலவையும் யோசுவா 22:22 இல் காணப்படுகிறது (*El*, *Elohim*, *YHWH*, தொடர்ச்சியாக)

2. *Elyon* (BDB 751, KB 832)

1. இதன் அடிப்படை பொருள் "உன்னதமானது," "உயர்ந்தது" அல்லது "உயர்த்தப்பட்டது" (ஒ.பா. ஆதி. 40:17; 1 இரா. 9: 8; 2 இரா. 18:17; நெகே. 3:25; எரே. 20: 2; 36:10; சங். 18:13).

2. இது தேவனின் பல பெயர்கள் / தலைப்புகளுக்கு இணையான அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது.

1. *Elohim* - சங். 47: 1-2; 73:11; 107: 11

2. *YHWH* - ஆதி 14:22; 2 சாமு. 22:14

3. *El-Shaddai* - சங். 91: 1,9

4. *El* - எண். 24:16

5. *Elah* - தானியேல் 2-6 மற்றும் எஸ்றா 4-7 ஆகியவற்றில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது, இது தானி. 3:26; 4: 2; 5: 18,21 Illair ("உன்னதமான தேவன் " என்பதற்கான அராமைப் பதம்) த்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

3. இது பெரும்பாலும் இஸ்ரேலியரல்லாதவர்களால் பயன்படுத்தப்படுகிறது.

1. மெல்கிசேதேக், ஆதி. 14: 18-22

2. பிலேயாம், எண். 24:15

3. மோசே, உபா. 32:8 ல் உள்ள தேசங்களைப் பற்றி பேசுகிறார். இது பெரும்பாலும் இஸ்ரேலியரல்லாதவர்களால் பயன்படுத்தப்படுகிறது.

4. புதிய ஏற்பாட்டில் உள்ள லூக்காவின் நற்செய்தி, புறஜாதியினருக்கு எழுதப்பட்டது, கிரேக்க சமமான Hupsistos யும் பயன்படுத்துகிறது (ஒ.பா. 1:32,35,76; 6:35; 8:28; அப்போஸ்தலர் 7:48; 16:17)

3. *Elohim* (பன்மை), *Eloah* (ஒருமை), முதன்மையாக கவிதைகளில் பயன்படுத்தப்படுகிறது (BDB 43, KB 52)

1. இந்த சொல் பழைய ஏற்பாட்டிற்கு வெளியே இல்லை.

2. இந்த வார்த்தை இஸ்ரவேலின் தேவனை அல்லது மற்றைய தேசங்களின் தேவர்களைக் குறிக்க முடியும் (ஒ.பா. யாத்திராகமம் 3: 6; 20: 3). ஆபிரகாமின் குடும்பம் பலதெய்வமாக இருந்தது (ஒ.பா. யோசுவா 24: 2).

3. இது இஸ்ரவேலின் நியதிபதிகளை குறிக்கலாம் (ஒ.பா. யாத்திராகமம் 21: 6; சங். 82: 6).

4. *elohim* என்ற சொல் உபா. 32: 8 (LXX); சங். 8: 5; யோபு 1: 6; 38: 7ல் உள்ளதைப் போல மற்ற ஆவிக்குரிய மண்டலங்களிலும் (தேவதைகள், பேய்) பயன்படுத்தப்படுகிறது.

5. வேதாகமத்தில் இது தேவனிற்கான முதல் தலைப்பு / பெயர் (ஒ.பா. ஆதி. 1: 1). இது ஆதி. 2: 4 வரை பிரத்தியேகமாக பயன்படுத்தப்படுகிறது, அங்கு இது *YHWH* உடன் இணைக்கப்படுகிறது. இது அடிப்படையில் (இறையியல் ரீதியாக) தேவனை இந்த கிரகத்தில் அனைத்து உயிர்களையும் உருவாக்கியவர், பராமரிப்பவர் மற்றும் வழங்குபவர் என்று குறிப்பிடுகிறது (ஒ.பா. சங்கீதம் 104).

இது El (ஒ.பா. உபா. 32: 15-19) என்பதற்கு ஒத்ததாகும். இது YHWHக்கான சங்கீதம் 14ன் (Elohim, vv. 1,2,5; *YHWH*, vv. 2,6; *Adon*, v. 4) இணை வசனமாகும்.

6. பன்மை மற்றும் பிற தெய்வங்களுக்குப் பயன்படுத்தினாலும், இந்த சொல் பெரும்பாலும் இஸ்ரேலின் தேவனைக் குறிக்கிறது, ஆனால் வழக்கமாக இது ஏகத்துவ பயன்பாட்டைக் குறிக்கும் ஒற்றை வினைச்சொல்லைக் கொண்டுள்ளது (சிறப்பு தலைப்பு: ஏகதெய்வவாதத்தைப் பார்க்கவும்).

7. இஸ்ரவேலின் ஏகத்துவ தேவனுக்கு ஒரு பொதுவான பெயர் பன்மையில் இருப்பது என்பது விந்தையானது (ஆதியாகமம் 1:26; 3:22; 11: 7 இல் "எங்கள்" குறிப்பிடப்பட்டுள்ளது)! உறுதியாக இல்லை என்றாலும், இங்கே கோட்பாடுகள் உள்ளன.

   1. எபிரேய மொழியில் பல பன்மைகள் உள்ளன, அவை பெரும்பாலும் வலியுறுத்தப் பயன்படுகின்றன. இதனுடன் நெருங்கிய தொடர்புடையது பிற்கால எபிரேய இலக்கண அம்சமாகும், இது பன்மையின் மகிமை என்று அழைக்கப்படுகிறது, அங்கு ஒரு கருத்தை விவரிக்க பன்மை பயன்படுத்தப்படுகிறது.

   2. தேவன் பரலோகத்தில் சந்திக்கிற, அவருடைய கட்டளைகளை செய்கிற தூதர் சபையை இது குறிக்கலாம், (ஒ.பா. 1 இரா. 22: 19-23; யோபு 1: 6; சங். 82: 1; 89: 5,7).

   3. இது புதிய ஏற்பாட்டின் வெளிப்பாடாக மூன்று நபர்களில் உள்ள ஒரே தேவனை பிரதிபலிக்கிறது. ஆதி 1: 1 ல் தேவன் படைக்கிறார்; ஆதி. 1: 2 ஆவியானவர் வளர்க்கிறார், புதிய ஏற்பாட்டிலிருந்து இயேசு படைப்பில் பிதாவின் தூதராக இருக்கிறார் (ஒ.பா. யோவான் 1: 3,10; ரோமர் 11:36; 1 கொரி. 8: 6; கொலோ. 1:16; எபி. 1: 2; 2:10)

4. *YHWH* (BDB 217, KB 394)

1. தெய்வத்தை உடன்படிக்கை செய்யும் தேவனாக பிரதிபலிக்கும் பெயர் இது; தேவன் இரட்சகராக, மீட்பராக! மனிதர்கள் உடன்படிக்கைகளை மீறுகிறார்கள், ஆனால் தேவன் தம்முடைய வார்த்தைக்கு, வாக்குறுதிக்கு, உடன்படிக்கைக்கு விசுவாசமாக இருக்கிறார் (சங்கீதம் 103).

இந்த பெயர் முதலில் ஆதி. 2: 4 ல் *Elohim* முடன் இணைந்து குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதியாகமம் 1-2 இல் இரண்டு படைப்புப் பட்டியல் இல்லை, ஆனால் இரண்டு கருத்தியல் முக்கியத்துவங்கள் உள்ளன:

1. பிரபஞ்சத்தின் சிருஷ்டிகராக தேவன் (பௌதீக; சங்கீதம் 104)
2. மனிதகுலத்தின் சிறப்பு சிருஷ்டிகராக தேவன் (சங்கீதம் 103)

2. ஆதி. 4: 26 ல் "மனிதர்கள் கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்" (*YHWH*) என்று கூறப்படுகிறது. இருப்பினும், யாத்திராகமம் 6: 3ல் ஆரம்பகால உடன்படிக்கை மக்கள் (கோத்திரப் பிதாக்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள்) தேவனை *El Shaddai*யாக மட்டுமே அறிந்திருந்தார்கள் என்பதைக் குறிக்கிறது. யாத்.3:13-16, YHWH என்ற பெயர் ஒரு முறை மட்டுமே விளக்கப்பட்டுள்ளது. விஷேடமாக 14ம் வசனத்தில். இருப்பினும், மோசேயின் எழுத்தாக்கங்கள் பெரும்பாலும் பிரபலமான சொற்களை பயன்படுகிறதயே அர்த்தவியல்படுத்துகின்றன, சொற்பிறப்பியலை அல்ல (ஒ.பா. ஆதி. 17: 5; 27:36; 29: 13-35). இப் பெயரின் பொருள் குறித்து பல கோட்பாடுகள் உள்ளன (IDB, தொகுதி 2, பக். 409-11 இலிருந்து எடுக்கப்பட்டது).

1. ஒரு அரபு மூலத்திலிருந்து, "ஆர்வமுள்ள/ஊக்கமுள்ள அன்பைக் காட்ட"
2. ஒரு அரபு மூலத்திலிருந்து "ஊதுவதற்கு" (புயல் கடவுளாக YHWH)
3. ஒரு உகார்டிக் (கானானியர்) மூலத்திலிருந்து "பேசுவதற்கு"
4. ஒரு பீனீசியன் கல்வெட்டைத் வாசிக்கும் போது, "நிலைநிறுத்துபவர்" அல்லது "நிர்மாணிப்பவர்" என்று பொருள்படும் ஒரு காரண எச்சவினையாகும்.
5. எபிரேய *Qal* எனும் பத்ததிலிருந்து "இருந்தவர்" அல்லது "இருக்கின்றவர்" (எதிர்கால பதட்டத்தில், "இருப்பவர்")
6. எபிரேய *Hiphil* எனும் பத்ததிலிருந்து "இருக்கக் கூடியவர்"
7. எபிரேய மூலத்திலிருந்து "ஜீவிப்பதற்கு" (உதாரணமாக. ஆதி. 3:21), அதாவது "என்றென்றும் ஜீவிக்கும், ஜீவிக்கும் ஒருவர்"

8. யாத். 3: 13-16 ன் சூழல் அமைவிலிருந்து இருந்து. ஒரு முற்றுவினையாக பயன்படுத்தப்பட்ட முற்றாவினையாகும் "நான் தொடர்ந்து இருந்ததைப் போலவே இருப்பேன்" அல்லது "நான் எப்போதும் இருந்தபடியே இருப்பேன்" (cf. J. Wash Watts, *A Survey of Syntax in the Old Testament*, p. 67). YHWH என்ற முழுப் பெயர் பெரும்பாலும் சுருக்கமாக அல்லது அதன் அசல் வடிவத்தில் வெளிப்படுத்தப்படுகிறது.

1. *Yah* (உதாரணமாக., Hallelu - *yah*, BDB 219, ஒ.பா. யாத்திராகமம் 15: 2; 17:16; சங். 89: 8; 104: 35)

2. *Yahu* (பெயர்களின் முடிவு "யா", உதாரணமாக, ஏசாயா)

3. *Yo* (பெயர்களின் ஆரம்பம் "யோ", உதாரணமாக, யோசுவா அல்லது யோவெல்).

3. பிற்காலத்தில் யூத மதத்தில் இந்த உடன்படிக்கை பெயர் மிகவும் பரிசுத்தமானதால் (டெட்ராகிராமட்டன் 4 எழுத்து கொண்ட YHWH) யூதர்கள் யாத்திராகமம் 20: 7, உப. 5:11; 6:13 இன் கட்டளையை மீறாதபடிக்கு அதைச் சொல்ல பயந்தார்கள். எனவே அவர்கள் எபிரேய வார்த்தையை "உரிமையாளர்," "ஆண்டவர்," "கணவர்," "ஆண்டவர்" - *adon* அல்லது *adonai* (என் எஜமானர்) என்று மாற்றினர். பழைய ஏற்பாட்டு நூல்களைப் படிக்கும்போது அவர்கள் YHWH க்கு அவர்கள் "எஜமானர்" என்று உச்சரித்தனர். இதனால்தான் YHWH ஆங்கில மொழிபெயர்ப்புகளில் எஜமானர் என்று எழுதப்பட்டுள்ளது.

4. *El* ப் போலவே, YHWH யும் பெரும்பாலும் பிற சொற்களுடன் இணைக்கப்பட்டு இஸ்ரேலின் உடன்படிக்கை தேவனின் சில பண்புகளை வலியுறுத்துகிறது. பல சாத்தியமான இணை சொற்கள் இருக்கின்றன, பின்வருவன.

1. YHWH - *Yireh* (YHWH பார்த்துக்கொள்வார், BDB 217 & 906), ஆதி. 22:14

2. YHWH - *Rophekha* (YHWH உங்கள் பரிகாரி, BDB 217 & 950, *Qal* எச்சவினை), யாத். 15:26

3. YHWH - *Nissi* (YHWH எனது ஜெயக்கொடி , BDB 217 & 651), யாத். 17:15

4. YHWH - *Meqaddishkem* (YHWH உங்களை பரிசுத்தப்படுத்துபவர், BDB 217 & 872, *Piel* எச்சவினை), யாத். 31:13

5. YHWH - *Shalom* (YHWH என் சமாதானம், BDB 217 & 1022), நியாதி. 6:24

6. YHWH - *Sabbaoth* (சேனைகளின் YHWH, BDB 217 & 878), 1 சாமு. 1: 3,11; 4: 4; 15: 2; பெரும்பாலும் தீர்கதரிசிகளில்

7. YHWH - *Ro'I* (YHWH என் மேய்ப்பன், BDB 217 & 944, *Qal* எச்சவினை), சங். 23:1

8. YHWH - *Sidqenu* (YHWH எங்கள் நீதி, BDB 217 & 841), எரே. 23: 6

9. YHWH - *Shamma* (YHWH அங்கே இருக்கிறார், BDB 217 & 1027), எசே. 48:35

Copyright © 2014 Bible Lessons International

**1:10** இந்த வசனம் சுவிசேஷத்தின் சுருக்கம் போன்றது (ஒ.பா. 1 கொரி. 15: 1-4). இந்த சுருக்கங்கள் பெரும்பாலும் *kerygma* ("பிரகடனம்") என்று அழைக்கப்படுகின்றன.
சிறப்பு தலைப்பு: ஆதி திருச்சபையின் கெரிக்மா

**SPECIAL TOPIC: THE KERYGMA**

**சிறப்பு தலைப்பு "கெரிக்மா**

கிறிஸ்தவம் பற்றிய பலக் கருத்துக்கள் காணப்படுகின்றன. எங்கள் தற்போதைய காலங்கள் பன்மைத்துவ மதத்தின் ஒரு காலமாக இருக்கிறது போல முதல் நூற்றாண்டும் காணப்பட்டது. தனிப்பட்ட முறையில், இயேசு கிறிஸ்துவை அறிந்ததாகவும் விசுவாசிப்பதாகவும் கூறும் அனைத்து குழுக்களையும் நான் முழுமையாக உள்ளடக்கியுள்ளேன், ஏற்றும் கொள்கிறேன். இதைப் பற்றி நாம் அனைவரும் உடன்படவில்லை, ஆனால் அடிப்படையில் கிறிஸ்தவம் என்பது இயேசுவைப் பற்றியது. இருப்பினும், கிறிஸ்தவர்கள் என்று கூறும் குழுக்கள் உள்ளன, அவை "ஒரே மாதிரியானவை" அல்லது "புது வரவுகள்" என்று தோன்றுகிறது. வித்தியாசத்தை நான் எப்படி சொல்வது?

நல்லது, இரண்டு வழிகள் உள்ளன:

1. நவீன மரபு வழிபாட்டுக் குழுக்கள் எதை நம்புகின்றன என்பதை அறிய ஒரு பயனுள்ள புத்தகம் (அவர்களின் சொந்த நூல்களிலிருந்து) வால்டர் மார்ட்டின் எழுதிய ராஜ்யங்களின் வழிபாட்டு முறை (The Kingdom of the Cults by Walter Martin).

2. ஆதி திருச்சபையின் பிரசங்கங்கள், குறிப்பாக அப்போஸ்தலர் பணியில், அப்போஸ்தலர்கள் பேதுரு மற்றும் பவுல், முதல் நூற்றாண்டின் ஏவப்பட்ட ஆசிரியர்கள் கிறிஸ்தவத்தை வெவ்வேறு குழுக்களுக்கு எவ்வாறு காண்பித்தார்கள் என்பதற்கான அடிப்படை விளக்கத்தை நமக்குத் தருகிறார்கள். இந்த ஆரம்பகால "பிரகடனம்" அல்லது "பிரசங்கம்" (அப்போஸ்தலர் பணியின் ஒரு சுருக்கமாக இருக்கின்றது) கிரேக்க வார்த்தையான கெரிக்மா மூலம் செல்கிறது. அப்போஸ்தலர் பணியில் உள்ள இயேசுவைப் பற்றிய நற்செய்தியின் அடிப்படை உண்மைகள் பின்வருமாறு:

    1. பல பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுகிறது - அப்போஸ்தலர் 2: 17-21,30-31,34; 3: 18-19,24; 10:43; 13: 17-23,27; 33: 33-37,40-41; 26: 6-7,22-23

    2. 2. வாக்குறுதியளித்தபடி YHWH ஆல் அனுப்பப்பட்டவர் - அப்போஸ்தலர் 2:23; 3:26

3. அவருடைய செய்தியை உறுதிப்படுத்தவும், தேவனின் இரக்கத்தை வெளிப்படுத்தவும் அற்புதங்களைச் செய்தார் - அப்போஸ்தலர் 2:22; 3:16; 10:38

4. ஒப்புக்கொடுக்கப்பட்டவர், அற்பமாய் எண்ணப்பட்டவர் - அப்போஸ்தலர் 3: 13-14; 4:11

5. சிலுவையில் அறையப்பட்டவர் - அப்போஸ்தலர் 2:23; 3: 14-15; 4:10; 10:39; 13:28; 26:23

6. மரணத்திலிருந்து எழுப்பப்பட்டார் - அப்போஸ்தலர் 2: 24,31-32; 3: 15,26; 4:10; 10:40; 13:30; 17:31; 26; 23

7. தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டவர் - அப்போஸ்தலர் 2: 33-36; 3: 13,21

8. மீண்டும் வருப்போகிறவர் - அப்போஸ்தலர் 3: 20-21

9. ஏற்படுத்தப்பட்ட நியாதிபதி - அப்போஸ்தலர் 10:42; 17:31

10. பரிசுத்த ஆவியானவரை அனுப்பியவர் - அப்போஸ்தலர் 2: 17-18,33,38-39; 10: 44-47

11. விசுவாசிக்கிற அனைவருக்கும் இரட்சகர் - அப்போஸ்தலர் 13: 38-39

12. அவரைத் தவிர வேறு யாரும் மீட்பர் அல்ல - அப்போஸ்தலர் 4:12; 10: 34-36

சத்தியத்தின் அப்போஸ்தலிக்க தூண்களுக்கு பதிலளிக்க சில வழிகள் இங்கே:

1. மனந்திரும்புங்கள் - அப்போஸ்தலர் 2:38; 3:19; 17:30; 26:20

2. விசுவாசியுங்கள் - அப்போஸ்தலர் 2:21; 10:43; 13: 38-39

3. ஞானஸ்நானம் பெறுங்கள் - அப்போஸ்தலர் 2:38; 10: 47-48

4. ஆவியைப் பெறுங்கள் - அப்போஸ்தலர் 2:38; 10:47

5. அனைவரும் அவரிடம் வரலாம் - அப்போஸ்தலர் 2:39; 3:25; 26:23

இந்த அமைப்புமுறை ஆதித் திருச்சபையின் அத்தியாவசிய பிரகடனமாக இருந்தது, புதிய ஏற்பாட்டின் வெவ்வேறு ஆசிரியர்கள் ஒரு பகுதியை பிரகடனத்திற்க்காக விட்டுவைப்பார்கள் அல்லது அவர்களின் எழுத்துக்களில் பிற விவரங்களை வலியுறுத்துவார்கள். மாற்கின் முழு நற்செய்தியும் பேதுருவின் பிரகடன (*kerygma*) அம்சத்தை நெருக்கமாகப் பின்பற்றுகிறது. மாற்குப் புத்தகம் பாரம்பரியமாக, ரோமில் பிரசங்கிக்கப்பட்ட பேதுருவின் பிரசங்கங்களை எழுதப்பட்ட சுவிசேஷமாக கட்டமைப்பதாக காணப்படுகிறது. மத்தேயு மற்றும் லூக்கா இருவரும் மாற்கின் அடிப்படை கட்டமைப்பைப் பின்பற்றுகிறார்கள்.

Copyright © 2014 Bible Lessons International

▣ **"அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும்"** இது இன்னொரு நிகழ்கால முடிவிலி. அவர்கள் தொடர்ந்து தேவனுக்கு ஊழியம் செய்தார்கள் (ஒ.பா.1 தெச. 1: 9) மற்றும் கிறிஸ்துவின் வருகைக்காகக் காத்திருக்கவும் செய்தார்கள். இந்நிருபத்தின் இறையியல் முக்கிய குறிப்பாக பவுல் இரண்டாவது வருகைக்கான தனது முக்கியத்துவத்தைத் தொடர்ந்தார். ஒவ்வொரு அதிகாரமும் இந்த விஷயத்தில் முற்றுப்பெறுகிறது (ஒ.பா. 1 தெச. 1:10; 2:19; 3:13; 4: 13-18; 5:23). 1 தெச 5: 9 இல் சிறப்பு தலைப்பைக் காண்க.

▣ **"அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும்"** குமாரனின் பதிலீட்டு மரணத்தை பிதா ஏற்றுக்கொண்டதை இது உறுதிப்படுத்தியது (ஒ.பா. 1 கொரி. 15). திரித்துவத்தின் மூன்று நபர்களும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் தீவிரமாக இருந்தனர்: பிதா - அப்போஸ்தலர் 2:24; 3:15; 4:10; 5:30; 10:40; 13:30, 33, 34, 37; 17:31; ஆவி - ரோமர். 8:11 மற்றும் குமாரன் - யோவான் 2: 19-22; 10: 17-18. சிறப்பு தலைப்பு: கலா 4: 4 இல் உள்ள திரித்துவத்தைப் பார்க்கவும்.

▣ **"நம்மை இரட்சிக்கிறவருமாயிருக்கிற"** இது நிகழ்கால நடுத்தர (பெயரடை) எச்சவினையாகும், இது நம் சார்பாக இயேசுவின் தொடர்ச்சியான நடவடிக்கையை வலியுறுத்துகிறது. வெற்றி சிறக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது (ஒ.பா. ரோமர் 8: 31-39). அவர் தொடர்ந்து நமக்காக பரிந்து பேசுகிறார் (ஒ.பா. 1 யோவான் 2: 1; எபி. 7:25; 9:24).

▣ **"இனிவரும் கோபாக்கினையினின்று"** சிலருக்கு, இயேசுவின் இரண்டாவது வருகை அவர்களின் பெரிய நம்பிக்கையாகவும், ஆனால் மற்றவர்களுக்கு அது அவர்களின் நித்திய இழப்பாகயாகவும் இருக்கும். விசுவாசிகள் யூதர்களினதும் புறஜாதியினரதும் உபாத்திரவப்படுத்துதலையும் அழுத்தத்தையும் அனுபவிப்பார்கள், ஆனால் அவர்கள் ஒருபோதும் தேவனின் கோபாக்கினையை அனுபவிக்க மாட்டார்கள் (ஒ.பா. 1 தெச. 5: 9). கிறிஸ்துவை நிராகரிக்கும் அனைவருக்கும் தேவனின் கோபாக்கினை வருகிறது (நிகழ்கால நடுத்தர (பெயரடை) எச்சவினை) (ஒ.பா. 1 தெச. 2:16; மத் 25; ரோமர் 1-2). கோபம் என்பது ஒரு மானுடவியல் சொல் என்பது நிச்சயமாக உண்மை, அதேபோல் "தேவனின் அன்பு"ம் அதேபோன்ற சொல்லாகும். 1 தெசலோனிக்கேயர் ஒவ்வொரு அதிகாரத்தின் முடிவிலும் இரண்டாவது வருகைக்கான ஒரு குறிப்பு முக்கிய இடம்பெறுகின்றது. (ஒ.பா. 1 தெச. 1:10; 2:19; 3:13; 4: 13-18; 5:23). புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் காலத்தையும் வரலாற்றையும் வரவிருக்கும் நியாயதீர்ப்பு மற்றும் வெகுமதியை உலகக் கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள். புதிய ஏற்பாடு முற்றிலும் இறுதியியல் சம்பந்தப்பட்டது (ஒ.பா. *How to Read the Bible For All Its Worth* by Fee and Stuart, pp. 131-134).

**SPECIAL TOPIC: TRIBULATION**

**சிறப்பு தலைப்பு: உபத்திரவம் (thlipsis)**

இந்தப் பதத்தை *(thlipsis)* பவுல் பயன்படுத்துவதற்கும் யோவான் பயன்படுத்துவதற்கும் இடையில் ஒரு இறையியல் வேறுபாடு இருக்க வேண்டும்.

1. பவுலின் பயன்பாடு (இது இயேசுவின் பயன்பாட்டை பிரதிபலிக்கிறது)

1. வீழ்ச்சியடைந்த உலகு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், துன்பங்கள், தீமை
    1. மத். 13:21
    2. ரோம. 5: 3
    3. 1 கொரி. 7:28
    4. 2 கொரி. 7: 4
    5. எபே. 3:13
2. அவிசுவாசிகளால் ஏற்படும் பிரச்சினைகள், துன்பங்கள், தீமை
    1. ரோம. 5: 3; 8:35; 12:12
    2. 2 கொரி. 1: 4,8; 6: 4; 7: 4; 8: 2,13
    3. எபே. 3:13
    4. பிலி. 4:14
    5. 1 தெச. 1: 6
    6. 2 தெச. 1: 4
3. கடைசிக் காலத்தில் ஏற்படும் பிரச்சினைகள், துன்பங்கள், தீமை
    1. மத். 24: 21,29
    2. மாற். 13: 19,24
    3. 2 தெச. 1: 6-9

2. யோவானின் பயன்பாடு
    1. வெளிப்படுத்துதலில் யோவான் *thlipsis* மற்றும் *orgē* அல்லது *thumos*(கோபம்) ஆகியவற்றுக்கு இடையே ஒரு குறிப்பிட்ட வேறுபாட்டைக் காட்டுகிறார். *thlipsis* என்பது அவிசுவாசிகள் விசுவாசிகளுக்கு என்ன செய்கிறார்கள் மற்றும் *orgē* மற்றும் *thumos* என்பது தேவன் அவிசுவாசிகளுக்கு என்ன செய்கிறார் என்பதை குறிக்கிறது.
        1. *thlipsis* – வெளி. 1:9; 2:9-10,22; 7:14
        2. *orgē* – வெளி. 6:16-17; 11:18; 16:19; 19:15
        3. *thumos* – வெளி. 12:12; 14:8,10,19; 15:1,7; 16:1; 18:3
    2. ஒவ்வொரு காலத்திலும் விசுவாசிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பிரதிபலிக்க யோவான் தனது நற்செய்தியில் இந்த வார்த்தையை பயன்படுத்துகிறார் - யோவான் 16:33.

Copyright © 2014 Bible Lessons International

**சிறப்பு தலைப்பு: தெய்வத்தை மானிட பண்புகளில் விவரித்தல்.**

**SPECIAL TOPIC: ANTHROPOMORPHIC LANGUAGE TO DESCRIBE DEITY**

இது ஒரு வகை மொழியாகும் (உதாரணமாக, மனித சொற் பாதங்களில் விவரிக்கப்பட்ட தெய்வம்) பழைய ஏற்பாட்டில் இது மிகவும் பொதுவானது (சில எடுத்துக்காட்டுகள்)

1. உடல் பாகங்கள்
   1. கண்கள் - ஆதி. 1: 4,31; 6: 8; யாத். 33:17; எண் 14:14; Dt 11:12; சக 4:10
   2. கரங்கள் - யாத். 15:17; எண் 11:23; Dt. 2:15
   3. கை - யாத். 6: 6; 15:16; உபா. 4:34; 5:15
   4. காதுகள் - எண் 11:18; 1 சாமு. 8:21; 2 இரா. 19:16; சங். 5: 1; 10:17; 18: 6
   5. முகம் - ஆதி. 33:11; லேவி. 20: 3,5,6; எண். 6:25; 12: 8; உபா. 31:17; 32:20; 34:10
   6. விரல் - ஆதி. 8:19; 31:18; உபா. 9:10; சங். 8: 3
   7. குரல் - ஆதி 3: 9,11,13; யாத். 15:26; 19:19; உபா. 26:17; 27:10
   8. அடிபதாம் - ஆதி. 24:10; எசே. 43: 7
   9. மனித வடிவம் - ஆதி. 24: 9-11; சங் 47; ஏசா. 6: 1; எசே. 1:26
   10. கர்த்தருடைய தூதன் - ஆதி. 16: 7-13; 22: 11-15; 31: 11,13; 48: 15-16; யாத். 3: 4,13-21; 14:19; நியா. 2: 1; 6: 22-23; 13: 3-22
2. சரீரத்தின் அசைவுகள் (எடுத்துக்காட்டுகளைப் பார்க்கவும்)
   1. படைப்பின் பொறிமுறையாக பேசுவது - ஆதி 1: 3,6,9,11,14,20,24,26
   2. நடத்தல் (உதாரணமாக, ஒலி) - ஆதி 3: 8; லேவி .26: 12; உப. 23:14; ஆப. 23:14
   3. நோவாவின் பேழையின் கதவை மூடுவது - ஆதி. 7:16
   4. சுகந்த வாசனையை நுகர்தல் - ஆதி 8:21; லேவி. 26:31; ஆமோஸ் 5:21
   5. கீழே இறங்கி வருதல் - ஆதி 11: 5; 18:21; யாத். 3: 8; 19: 11,18,20
   6. மோசேயை அடக்கம் செய்தல் - உப. 34: 6B.
3. மனித உணர்ச்சிகள் (சில எடுத்துக்காட்டுகள்)

1. மனஸ்தாபம் / மணமாறல் - ஆதி 6: 6,7; யாத். 32:14; நியா. 2:18; 1 சாமு. 15: 29,35; ஆமோஸ் 7: 3,6
2. கோபம் - யாத். 4:14; 15: 7; எண். 11:10; 12: 9; 22:22; 25: 3,4; 32: 10,13,14; உபா. 6:15; 7: 4; 29:20
3. பொறாமை - யாத். 20: 5; 34:14; உபா. 4:24; 5: 9; 6:15; 32: 16,21; யோசு. 24:19
4. வெறுப்பு / அரோசித்தல் - லேவி. 20:23; 26:30; உபா. 32:19

4. குடும்ப உறவுச் சொற்கள் (சில எடுத்துக்காட்டுகள்)
   1. பிதா
      1. இஸ்ரேலின் - யாத். 4:22; உபா. 14: 1; ஏசா. 1: 2; 63:16; 64: 8; எரே. 31: 9; ஓசியா. 11: 1
      2. ராஜாவின் - 2 சாமு. 7: 11-16; சங். 2: 7
      3. பிதாவின் கிரியைகளின் உருவகங்கள் - உபா. 1:31; 8: 5; 32: 6-14; சங். 27:10; நீதி. 3:12; எரே. 3: 4,22; 31:20; ஓசியா 11: 1-4; மல். 3:17
   2. பெற்றோர் - ஓசியா 11: 1-4
   3. தாய் - ஏசா. 49:15; 66: 9-13 (பாலூட்டும் தாய்க்கு ஒப்புமை)
   4. இளம் உண்மையுள்ள காதலன் - ஓசியா 1-3

இந்த வகை மொழியைப் பயன்படுத்துவதற்கான காரணங்கள்

1. தேவன் தன்னை மனிதர்களுக்கு வெளிப்படுத்த வேண்டியுள்ளது. விழுந்த, இந்த உலகச் சொற்களைத் தவிர வேறு சொற்களஞ்சியம் இல்லை. தேவன் ஆண் என்ற பரவலான கருத்து தேவனை மானிட பண்புகளில் விவரித்தளால் உண்டானதாகும், ஏனென்றால் தேவன் ஆவியாயிருக்கின்றார்!
2. மனித வாழ்க்கையின் மிக அர்த்தமுள்ள அம்சங்களை தேவன் எடுத்துக்கொண்டு, வீழ்ந்த மனிதகுலத்திற்கு (பிதா, தாய், பெற்றோர், காதலன்) தன்னை வெளிப்படுத்த அவற்றைப் பயன்படுத்துகிறார்.
3. சில நேரங்களில் இவை அவசியமானதாக இருந்தாலும் (உதாரணமாக, ஆதி. 3:8), எந்தவொரு உடல் வடிவத்திற்கும் மட்டுப்படுத்தப்படுவதை தேவன் விரும்பவில்லை (ஒ.பா. யாத்திராகமம் 20; உபாகமம் 5)
4. இறுதியாக மனிதமாக்கலாக இயேசுவின் அவதரிப்பு உண்டானது! தேவன் சரீரப்பிரகாரமாக, தொடக்கூடியவர் ஆனார் (ஒ.பா. I யோவான் 1: 1-3). தேவனின் செய்தி தேவனுடைய வார்த்தையாக மாறியது (ஒ.பா. யோவா. 1: 1-18).

ஒரு நல்ல சுருக்கமான கலந்துரையாடலுக்கு, G. B. Caird, *The Language and Imagery of the Bible*, அதிகாரம் 10, *The International Standard Bible Encyclopaedia* ல் உள்ள "மனிதமாக்கல், "Anthropomorphism", pp. 152-154 ஐப் பார்க்கவும்.

Copyright © 2014 Bible Lessons International

## கலந்துரையாடல் கேள்விகள்

இது ஒரு ஆய்வு வழிகாட்டி வர்ணனையாகும், அதாவது வேதகமத்தைப் பற்றிய உங்கள் சொந்த விளக்கத்திற்கு நீங்களே பொறுப்பு. நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் இருக்கும் வெளிச்சத்தில் நடக்க வேண்டும். நீங்கள், வேதாகமம் மற்றும் பரிசுத்த ஆவியானவர் மொழிபெயர்ப்பில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். இதை நீங்கள் ஒரு வியாக்கியானவியலாளரிடம் விட்டுவிடக்கூடாது.

புத்தகத்தின் இந்த பகுதியின் முக்கிய பிரச்சினைகள் மூலம் சிந்திக்க உதவும் வகையில் இந்த விவாத கேள்விகள் வழங்கப்படுகின்றன. அவை உறுதியானவை அல்ல, தூண்டக்கூடியவை என்று கருதப்படுகின்றன.

1. இந்த நிருபத்தில் பவுல் தனது அப்போஸ்தலத்துவத்தைப் ஏன் உறுதிப்படுத்தவில்லை?
2. 1 வது வசனத்தின் முக்கியத்துவம் என்ன?
3. புதிய ஏற்பாட்டில் விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு ஆகியவை ஏன் அடிக்கடி ஒருமிக்க குறிப்பிடப்படுகின்றன?
4. விசுவாசிகளின் கிரியைகளுடன் தெரிந்துகொள்ளப்படல் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது?
5. கிறிஸ்தவர்கள் ஏன் கஷ்டப்படுகிறார்கள்? இரண்டாவது வருகை உபாத்திரவத்தின் சிக்கலை எவ்வாறு எதிர்கொள்கிறது?